உ

தேவிசகாயம்.

# திருமகளந்தாதி.

இஃது

முருகதாசசுவாமிகளென்றும்

திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்

விளங்குகின்ற

## ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருள

சைதாப்பேட்டை

வித்வான்

திரு - நாராயணசாமிமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

சென்னை:

ஸ்ரீவராட்சார்த்தசித்தச்சபையாரால்

சென்னை:

இந்து தியலாஜிகல் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விஜய௵ கார்த்திகை௴.

உ

தேவிசகாயம்.

# சாத்துகவிகள்.

அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களியற்றிய

### ஆசிரியப்பா.

காமகட் கினிய நான்முகற் கனையாம்
பூமக ளாக்கம் பூரித் தார்தர
விரைவி ழிலஞ்சியு ளிருந்தளை நெகிழத்
துணர்சூழ் முளரிச் சுரிமலர் ஞாங்கர
வயாவுறு கடிநாள் வத்திரத் தடங்கிய
கியாத மாதர் கிளர்தன் கேள்வனொ
டொத்தெரி வலம்வர முஞற்று வார்போன்
முத்துற ழோதிம முன்னுறும் பெடையுடன்
றிரிதரூஉக். தண்டுறை திகழ்தர மரீஇய
திருநெல் வேலியாந் திப்பிய நகரிற்
றவமே தாவியர் தருக்கு வாய்ப்ப
வவதரித் திட்ட வபர வருண
கிரியென யாருங் கிளர்க்குஞ் சந்த
வரிசைத் தமிழிற் கிலக்கணம் வகுத்த
சரபக் கவிஞன் சைவ ஞானப்
பிரபுவென் றிலங்கும் பெரியரிற் பெரிய
னுலகிலெப் புலவரு முரைக்க முடியா
வொலியலந் தாதி யொருமூன் றுரைத்தோ
னுயிர மாயிர மனேகந் திருப்புகழ்
மாயிரு ஞாலம் வழங்க வருளினோன்
பசுக்கொலை யாதி பாரினிற் பாற
வசிக்குமா மாதையில் வளர்தவம் புரிவோன்
புகழ்முழு நீறு பூசிய முனிவரன்
திகழ்கவு மாரச் செல்வ திவாகர
னெண்டிசை தனிலு மிணைதனக் கில்லாத்
தண்ட பாணிச் சாமி வரோதய
னிருவகைப் பொருளு மிணைவிழி யாயுறும்
பெருமைசே ரங்கள பிராமி யம்மையி
னருமையாங் கடைக்க ணருளைப் பெறூஉந்
திருமகளந் தாதி சிறக்கச் சொற்றன

னித்தனை நூலை யெவரு மேத்திப்
பத்தியாய்ப் பராஅய்ப் பாடி நாளு
நன்றிகண் மூற்று நாடிட வச்சிட்
டொன்றையா யிரமா யுதவின னியார்க்கும்
இளவொளி கார்த்தி கேயச் செவ்வேள்
வளர்திருப் போரூர் வந்த வள்ளல்
பயிரான்மூ வுலகையும் பரியா லிக்கு
முயர்வே ளாளரு ளுதித்த வண்ணல்
பத்தியிற் சிறந்தோன் பண்ணிற் சிறந்தோன்
வித்தையிற் சிறந்தோன் விறலிற் சிறந்தோ
னறிவின் மிக்கோ னழகின்மிக்கோ
னெறியின் மிக்கோ னிதியின் மிக்கோன்
சீரார் முகுந்தச் சிதர னடிகொளுஉ
நாரா யணசாமி நாவ லோனே. (௯)

அரன்வாயல்
## தங்கவேலுப்பிள்ளையவர்களியற்றியன

சந்தனப்பொதியைக்குறுமுனிவழங்குந்தாம்பிரவன்னிமாநதிசூழ்
சுந்தரத்திருநெல்வேலியிற்றோன்றிச்சுப்பிரமணியகோவிதைபுஞ்
சந்தவண்பனுவற்றிணைபலகொழிக்குஞ்சத்தசாகரப்பெருவெள்ளப்
பைந்தமிழ்முருகதாசனற்றண்டபாணியாந்திருப்புகழ்ச்சாமி. (௧)

தஞ்சநந்தமக்குத்திருவருளொன்றேதானெனறுஞ்சரதநன்குணர்ந்தே
செஞ்சரோருகப்பூந்தளியில்வீற்றிருக்குஞ்செம்பொனேரிழைத்திருவனிதை
பிஞ்சிளமதிச்செஞ்சடிலநாயகற்குப்பின்வருந்தங்கையிந்திரைக்கோர்
செஞ்சொலந்தாதித்துதியதிமதுரத்தேன்கடன்மடைதிறந்தாங்கு. (௨)

சத்துவநெஞ்சநெக்குநெக்குருகிச்சார்தருமெண்வகைத்திருவாஞ்
சித்தியுமுத்திப்பேறும்வேட்டருளாற்றிகழ்திருவாய்மலர்ந்தளிப்ப
வித்தகவாழ்வென்றிருநிதிச்செல்வன்விளங்குநாராயணச்சாமி
முத்தமிழ்ப்புலவன்முத்திரித்துலகமுழுவதும்பரவுறப்புரிந்தான். (௩)

பவளமால்வரைநேர்மேனிப்பரமனைப்புரையுங்கும்பன்
றவளமாதனையர்கூடித்தகுந்தகுந்தகுமென்றேத்தித்
திவளலற்றுயகாடிந்தத்திருமகளந்தாதிச்சீ
ரிவளவென்றளவிட்டென்றுவியம்பலாந்தகைமைத்தன்றே. (௪)

முற்றிற்று.

தேவிசகாயம்.

# திருமகளந்தாதி.

## காப்பு.

நேரிசைவெண்பா.

மருமமதிற்சந்ததமுமாயன்வைத்துக்காக்குந்
திருமகளுக்கந்தாதிசெப்பக் - குருமரபிற்
பட்டார்குழாமிகழாப்பன்னிரண்டாழ்வார்பதமுங்
கட்டாயமானபெருங்காப்பு.

## நூல்.

கட்டளைக்கலித்துறைகள்.

திருமகளேதிருப்பாற்கடலூடன்றுதேவர்தொழ
வருமகளேயுலகெல்லாமுமென்றென்றும்வாழவைக்கு
மொருமகளேநெடுமாலுரத்தேயுற்றாரம்பெரிது
தருமகளேதமியேன்றலைமீதுநின்றாளவையே. (௧)

தாளையென்சென்னியின்மேனீவைத்தால்வெந்தரணிமுதற்
கோளைவன்றீவினைப்பேயோடுவென்றகுலாவுவன்காண்
வாளையொப்பாம்விழியானெடுமாலைமயக்கியப்பால்
வேளைநல்கிப்பதுலகோரும்வாழச்செய்மின்கொடியே. (௨)

மின்கொடியன்னவிடையாரனேகர்மிகவிகழும்
வன்கொடிசேனுந்தவிர்க்கின்றிலாயென்றுவாழ்விப்பையோ
மென்கொடிநுண்ணத்திருமாலுக்கீந்துவியன்பொலிசேர்ப்
பொன்கொடிப்பூதலத்தோர்தம்மையாளும்பொறியணங்கே. (௩)

பொறியரவிற்றுயில்கூரும்பிரானருட்புந்திகவர்ந்
தெறிகதிர்த்தாமரைப்பூமீதுவாழுமொரேந்திழையே
மறியறுத்துண்கின்றபொல்லார்க்குஞ்செம்பொன்வழங்கிடுநீ
யறிவினிற்குந்தமியேற்கிரங்காமையதிசயமே. (௪)

சயமகளிந்திரர்பல்லோர்வணங்குபொற்றாட்டிருவோர்
கயமுயக்காத்தவன்றன்னுயிர்போலுங்கமலையிந்த
வியனுலகூடெனைச்சோதிக்கின்றாளதுவிட்டொழித்தா
லயமுறழ்சிந்தையர்தம்பாற்கையேற்பதறுமுற்றுமே. (௫)

# திருமகளந்தாதி.

முற்றற்பவளச்சிலைபோன்முகுந்தன்றன்மொய்ம்பில்வளர்
கொற்றத்திருமடந்தாயடியேன்கலிக்கோடையிடை
பற்றற்றமேலவர்தங்கோலத்தோர்பேதைக்கைநன்றே
சற்றற்புதக்கருணைக்கடலாட்டத்தயைசெய்தியே. (௬)

செய்யதண்டாமரைப்பூமேல்வசிக்குந்திருமடந்தாய்
வையகநீசர்கைப்பட்டதனாலுண்மகிழ்கின்றையோ
மையணிவண்ணப்பெருமான்றனாணையிவ்வம்பொழித்தியா
முய்யநின்றண்ணருள்வாரிதியாட்டற்குளங்கொண்டிடே. (௭)

உளங்கொண்டபேரருளெத்தனைதேவருறச்செயினுந்
தளங்கொண்டதாமரையாளருளின்றெனிற்சஞ்சலமே
களங்கொண்டநஞ்சன்முதலாயதெய்வக்கணங்களுமவ்
வளங்கொண்டலாத்தினம்புண்பட்டவாம்பலவாறுளவே. (௮)

பலவாறுலகுக்கிதஞ்செய்யநாடுமென்பான்மைநச்சி
யுலவாக்கருணைபுரியாதிருக்கையுசிதங்கொலோ
நிலவார்சடைப்பெருமான்றங்கையாய்ப்பெருநீலவண்ணன்
கலவாமகிழ்மனையாயவன்மார்பிற்கவின்றபொன்னே. (௯)

பொன்னுமணியும்புவியாள்செங்கோலுமென்பூந்துகிலு
மின்னுமகுடமுதலாயபூணும்வியனழகு
மன்னும்வல்வீரமும்வாகையுமாகியவாழ்வனைத்து
நன்னுதற்செந்திருமங்கைதன்னாட்டங்கணல்குபவே. (௧௦)

நல்குரவஞ்சிநளிர்கடல்சூழ்ந்தநானிலத்தோர்க்
கொல்குமென்னைக்ககனத்தாரும்போற்றிசைத்துன்னச்செய்வாய்
பல்குருவாயராசாய்ப்புவிகாக்கும்பகவனுரு
கல்குலம்போருகப்பாவாய்நின்றண்ணருட்காக்கமுண்டே. (௧௧)

ஆக்கமென்றுள்ளனவெல்லாம்பொருந்துமரும்பொருளாய்ச்
சேக்கமலாதனத்துற்றாய்விண்ணுடர்தினம்பணியுந்
தாக்கணங்கேயென்றமிழ்மாலைகொண்டன்றுசாற்றியசொற்
காக்கவுங்காமதஞ்செய்கின்றையேயென்னகாரணமே. (௧௨)

காரணங்கோடுவெண்பானேரணங்குங்கருதியசெஞ்
சீரணங்கேயென்கலிநோய்முற்றிக்கணந்தீர்த்தருளோர்
வாரணங்காப்பத்தனிபோய்த்தவளவளைமுழக்கு
நாரணன்றேட்டநின்மங்கலங்கோடிநலம்பெறுமே. (௧௩)

நலந்தர்தகாரணன்பன்னியென்றியாருநவிலமல
ரிலந்தர்தவாழ்வுடைப்பாவாயைந்தேவருமேத்தெடுக்கும்
பொலந்தந்தமென்கழற்பூவையென்றேருமென்புன்கலிதீர்த்
துலந்தந்தவொன்னலரெல்லாநடுங்கவருளுநல்கே. (௧௪)

அருளும்பொருளுநின்னுடலென்றோர்ந்துமகிலத்துள்ளே
யிருளுந்துப்பாழ்ம டிப்பேயால்வருந்தெற்கிரங்கலென்றோ
சுருளுங்கருங்குழற்றோகாய்விண்ணுடர்தொழுமுனிவர்
தெருளுந்திருநெடுமாலூரத்தேவளர்செந்திருவே. (௧௫)

செந்திருவேநின்னருள்போற்றிநின்றுஞ்செகத்திலுள்ளார்
தந்திருவேட்டுத்தயங்குகின்றேனெனைத்தாங்கலென்றோ
சந்திரனோடுமெழுதோடும்பாற்கடறன்னில்வந்த
விந்திரையென்னப்பலர்கூறுஞாயமிலங்குறவே. (௧௬)

இலங்குந்திருவருளேதஞ்சமாமென்றியம்புமுண்மை
துலங்கும்படியெனைக்காத்தருள்வாய்பல்சுரக்கணமுங்
கலங்கும்படிபொருந்தானவராண்மைகழியவெல்லும்
பலங்குன்றிடாநெடுமாலகன்மார்பிற்பழகணங்கே. (௧௭)

பழங்கணனேகத்திற்பட்டுழன்றியான்பல்பருப்பதத்திற்
கிழங்குண்டமாதவர்தாமுகத்தாப்பெருங்கீர்த்திநட்டேன்
வழங்குந்திறமையுனக்கில்லையோவனைவாயில்வைத்து
முழங்குந்திருநெடுமாற்குயிரேநிகர்மொய்குழலே. (௧௮)

மொய்குழற்பாவையரோடுவெந்து[illegible]ன்மூரியம்பு
பெய்குதற்காற்றகில்லேன்றனைப்பாழ்மிடிப்பேயுந்தொட்டாற்
செய்குவதென்னையறிகின்றிலேனருட்சீரருள்வாய்
வைகுலவைம்படையான்றன்னையாண்டமலர்டிகளே. (௧௯)

மலரிற்பிறந்துநெடுமாலூரத்தில்வசிக்குமின்னே
யலகற்றபேறுவிழைவேற்கவ்வண்ணமருள்செய்திட்டா
லுலகிற்குநன்மையுண்டென்றனக்கும்புகழுண்டுகண்டாய்
பலமிக்கதானவனல்லேனன்மானிடப்பாலகனே. (௨௦)

பாலன்னமேனிக்கலைமகளார்வம்படைத்துமுன்றன்
சேலன்னகண்ணருளெய்தாமையான்மிகச்சீரழிந்தேன்
மாலன்னதெய்வமற்றில்லாமையோர்ந்தவன்மார்பில்வைகு
நூலன்னசிற்றிடைப்பாவாய்சற்றேயின்றுநோக்குதியே. (௨௧)

நோக்கஞ்சிறிதுமென்மேல்வைத்திலாய்மிகநொந்திளைத்துங்
காக்கவல்லாற்கருள்செய்தநின்கட்கடைக்காதலுற்றே
னூக்கமுமெய்யுணர்வுங்கொடுத்தாண்டிவ்வுலகறிபே
ராக்கமுந்தந்தருள்வாய்செய்யதாமரையாரணங்கே. (௨௨)

ஆரணங்கூப்பிடிலெட்டாதொளித்திட்டரும்புனத்தோர்
வாரணங்காத்திடச்சென்றுறூரத்தின்மருவுபெருஞ்
சீரணங்கேதமியேன்றன்னைவெள்ளிச்சிலம்பில்வைகுங்
காரணங்காளிறைபோல்வாழுமாறுகடாட்சித்திடே. (௨௩)

கடங்கொண்டநீரிருஞ்சரமாட்டக்கமலமல
ரிடங்கொண்டுவாழுமொரேந்திழையேசெல்வமியாவுநின்பொற்
றடங்கொண்டசென்னியினார்சொந்தமேயெனச்சாற்றுமுண்மைத்
திடங்கொண்டவென்னைக்கருதாதெங்கியார்க்கிதஞ்செய்குதியே. (௨௪)

செய்யபொன்மேனித்திருவேசெந்தாமரைச்சீர்மகளே
கையகத்துஞ்செழுந்தாமரையேந்துங்கனங்குழையே
வையமுற்றோர்குடைக்கீழ்வைத்துளாமைமறந்தனையே
ஐயமிக்கேற்பினுமெய்தாமலேக்கியலைகுவரோ. (௨௫)

அலைகடற்பள்ளிகொண்டோன்கைகளாலெடுத்தன்றணிந்த
விலையினின்மங்கலஞ்சான்றவென்றன்னைவெறுத்துவிடேல்
புலையுடைப்புல்லியர்தம்பாலுமேற்றுப்புழுங்குறுமிந்
நிலையொழித்தேற்பவர்வேட்கைநல்கார்வநிறைவருளே. (௨௬)

நிறைகின்றபூரணனுநெடுமாலகனெஞ்சகத்தி
லுறைகின்றநீயென்றனுண்மையுளியாதுமுணர்கிலையோ
வறைகின்றபாடல்கட்கென்றோர்பரிசுமருள்கிலையே
மறைகின்றநுண்ணிடைச்செம்பொன்வெற்பாங்கஞ்சமாமகளே. (௨௭)

மாமறைநீதிமுழுதுந்தணந்திம்மகிதலத்திற்
காமவினோதமதேமுயல்வாரிற்கடைப்பட்டெய்த்தே
னீமகிழ்ந்தென்னைத்தொடர்ந்தாளச்சற்றுநினைத்தருள்செந்
தாமரைப்பூம்பொகுட்டின்றலைமேயதனியணங்கே. (௨௮)

தனியேயிரந்துதிரிவார்தம்மீதுசெந்தாமரையாள்
பணிநீலக்கண்ணருட்பார்வைசற்றெய்திற்படைப்பெருக்குங்
குனிவார்சிலைமன்னர்கொண்டாடும்வீரமுங்கோதொழிந்த
முனிவோர்சொல்லாசியுமாதியசீர்வந்துமொய்த்திடுமே. (௨௯)

மொய்யார்செந்தாமரைப்பூமேற்குடிகொள்ளுமுத்தநகைச்
செய்யாளையன்றிமற்றோர்தெய்வமின்றிச்செகத்தினிடை
நெய்யார்வெந்தீயிற்கொடிதாயயாழ்த்தநிரப்பொழித்து
மெய்யாயசெல்வப்பெருக்கூடுவெப்பவிடுப்பதற்கே. (௩௦)

பதங்களெல்லாமும்பிறப்போடிறப்பில்பரத்துவமு
மிதங்கண்மற்றியாவுநன்காராயில்வேறில்லையெட்டெழுத்தா
னிதங்களிகூர்பெருமானெஞ்சின்மேவிநிருதர்தம்மேற்
கதங்களுஞ்செய்யும்பெருந்தேவியார்திருக்கண்ணருளே. (௩௧)

கண்ணகன்ஞாலங்களிகூருமாறுகருதுமெனை
தெண்ணமொன்றேனுமுடியாதொழியிலிளப்பமன்றோ
விண்ணவர்கூட்டங்களிகூரப்பாற்றிருவேலைகடைந்
துண்ணமுதீந்தபெருமான்றன்மார்பத்துறைபவட்கே. (௩௨)

பவனன்றன்மைந்தன்முதலாஞ்சில்வீரரும்பங்கயக்கண்
ணவனுஞ்சிவனுமொப்பாந்தேவர்தாமுமறைந்தசொற்க
ளிவனென்றுமெய்ப்படக்காண்கின்றிலேன்மலரோய்ந்திருக்குந்
தவளங்குலாநகைச்செந்திருநோக்கந்தரரமையினே. (௧௩)

தரையிற்புதைத்தபொருள்கரியாகத்தயங்குநரு
மரையிற்றரிக்கத்துணியுமிலாதிங்கலைபவருங்
கரையற்றதுன்பக்கடலூடமிழ்ந்துகலங்குநருந்
திரையிற்பிறந்துயர்சீமாட்டிகண்ணருள்சேர்ந்திலரோ. (௧௪)

சேரீயஞ்செம்பிரும்பாதியிற்பொன்செயுஞ்சீரியரும்
பாரீர்க்கடற்பலதீவுடனுண்டியர்பான்மையருஞ்
சூரீர்ந்துபெற்றசெயந்தாலளவறத்துள்ளுநரும்
வாரீரக்கொங்கைத்திருமாதுகண்ணருள்வாய்ந்தவரோ. (௧௫)

வாயசமோநரியோபூனையோவென்னும்வஞ்சகர்க்கு
மேயபல்சீருமொருக்காற்கொடுக்குமிறைவியிட
மாயவன்மார்புந்துளசியுமியானைவதனமுநற்
றூயவரில்லமும்வில்வமுந்தீபமுஞ்சொன்னமுமே. (௧௬)

சொன்னங்கொடுப்பதொன்றேதிருமாதருட்டோற்றமென்னுஞ்
சின்னமதிப்புலவீர்நன்மையாவுமச்செல்விபங்கே
கன்னலின்சொல்லவள்சேய்மனையாட்டிகனிந்தருள்வ
தின்னவெல்லாமவண்முன்பிறந்தாள்பங்கெனச்சொன்மினே. (௧௭)

எனக்குன்கடைக்கண்ணருள்வாரியின்றுளியின்றருளி
லுனக்கும்புகழுண்டுலகிற்குநன்மையுண்டுன்கணவன்
றனக்குங்களிப்புண்டுசத்தியமேயென்சொற்றள்ளிவிடேல்
கனக்குந்துணைமுலையோதிமம்போலுங்கமலமின்னே. (௧௮)

கமலாதனத்தனின்சேய்நெடுமானின்கணவனரன்
சமமானசோதரன்மற்றோரெல்லாந்தொழத்தக்கதொண்ட
ரெமதீனவன்கலிதீர்த்தாள்வதிற்றடையாதுளதோ
வமலேநன்றுமவைகுன்றுததாமெய்யருட்செல்வியே. (௧௯)

மெய்யனல்லேன்றவனல்லேன்சரதவிரதனல்லேன்
பையரவிற்றுயில்கூர்பெருமானெழும்பான்மைசொன்ன
ஐயமில்சீர்ச்சடகோபனுமாங்குரைத்தான்கண்டிலே
னுய்யவென்றுண்டருள்வாய்பதுமாதனத்துத்தமியே. (௨௦)

உத்தமச்சற்குருசேவையெய்தாதிங்குழலுமெனக்
கிந்தனையாசைகொடுத்திட்டதார்சற்றியம்புகண்டாய்
மத்தகவேழம்புரந்தபிரானைமனத்திலுன்னிப்
பத்தமுற்றோர்களையெந்நாளுங்காக்கும்பதுமமின்னே. (௨௧)

பதுமம்புனைந்தபதுமக்கையாற்பொற்பரிசருளின்
மதுவுண்டபேய்க்குரங்கனுரிகழ்ச்சியின்மாழ்குவனோ
விதுவொன்றுசென்னிப்பிரானுக்கயிலையின்மேவுமுண்மை
யதுகண்டுளார்க்கெளியாய்செம்பொன்மேனியணங்கரசே (௪௨)

அணங்கரசிந்திரையம்பிகைக்கின்பமருளிறைவி
கணங்களெல்லாந்தொழுங்காலுடையாளெனக்கண்டுகொண்டா
லிணங்கலர்சேனைக்கெமனாகுவேனடுத்தேத்தியன்பால்
வணங்கவல்லார்க்கன்னையாவேணிதேயென்றன்வண்குணமே (௪௩)

குணநீடுபாண்டவர்க்காத்தானைப்போலும்பல்கோடிசித்தர்
மணமார்துழாயணிப்பைங்கொண்டலூடென்றும்வாழவைத்தாய்
நிணம்வேட்டுக்கன்றுங்கொல்கின்றார்ப்பகைக்குமென்னெஞ்சழிந்தோர்
பிணமாயித்தேகம்விழச்செய்திடேன்மலர்ப்பெய்வலையே. (௪௪)

பெய்யுங்கனமுகிலோரேழுமொல்கப்பிறங்கலெடுத்
துய்யும்படிபல்பசுக்காத்தநாதனின்றான்விழைந்து
கொய்யும்புலையர்க்கரசானுமாவங்கொடுத்ததென்னோ
நெய்யுந்துசெங்கமலப்பொகுட்டேவளர்நேரிழையே. (௪௫)

நேராரனேகரிரத்தக்கடலிடைநீந்துபெரும்
போராடுமோர்வத்தரியாவரொன்றற்பசும்பொற்புமலி
நாராயணன்பதமேதஞ்சமாமெனநாடுமன்பர்
சீரார்செம்பொற்றிருமாதருணோக்குறுஞ்சிற்சிலரே. (௪௬)

சிற்பரதத்துவஞானமும்பார்மகள்சீர்பெறற்காப்
பற்பலமன்னர்குடிகேடுசெய்கின்றபண்புமெண்ணில்
கற்பொருகொங்கைக்கலவியும்வேட்டுழல்காதலுள்ளீ
ரற்புதநாரணன்மார்பிலுற்றாளையடுத்துய்ம்மினே (௪௭)

அடுத்திறைஞ்சும்புலவோர்பெற்றுவாழ்வுறவம்புயப்பூ
நடுத்திகழ்செய்யவணல்காததொன்றில்லைநாகமிசை
படுத்தியங்குந்திருமாலுந்தியாயபதுமமுன்னாள்
கொடுத்திடவந்தவன்கைசெய்ததாமண்டகோடியுள்ளே (௪௮)

உள்ளக்கமலத்தில்வந்துவந்தாடுமுனதருளிவ்
வெள்ளக்கமலப்புவியோர்முற்சற்றுவிளங்கவென்றே
கள்ளக்கமலனைப்பெற்றனைநாளுநகலந்துவகை
கொள்ளக்கமலமலர்மேற்குலாவியகோல்வளையே. (௪௯)

கோலவுருவுஞ்சமைந்தல்லார்துயர்கொய்தநெடு
மாலடியாரடிமைத்திறமேமிகவெளவுமென்னைச்
சாலமனந்தளரக்கண்டோவென்றுதாங்கிக்கொள்வா
யாலமுநீலமும்போலவிருண்டகண்ணணிந்ததிருவே. (௫௦)

அணித்தாகுநின்னருளென்றவப்பாகுமறிவடையப்
பணித்தாய்சில்கால்பயன்பாலித்துமாற்றினைபாவமன்றோ
வெணித்தாழ்வுறுநலமென்றருள்வாயென்றுமெய்ப்பெருமான்
மணித்தாமமார்பைவிட்டோவாதுவாழுமடவன்னமே. (௫௧)

அன்னமொப்பாயமருமகளார்வமடைந்தவர்க்குக்
கின்னஞ்செய்வாயெனப்படல்லோருலகிற்கிளைத்திடும்பொய்ச்
சொன்னம்பிலேனவளாயதுநீயென்றணிவடைந்தே
னின்னமுஞ்சோதனைசெய்யேல்கமலத்திருந்தவளே. (௫௨)

இருந்தையொப்பாமுருவாய்ந்தவெஞ்சாரணனீடழித்த
வருந்தவன்சொல்வழிச்சென்றறியேன்றுதிக்காசைகொண்டாய்
கருந்தனமேனுந்தருகின்றிலாய்தண்கருணையின்றோ
மருந்ததனோடுவெண்பாற்கடலூடன்றுவந்தபொன்னே. (௫௩)

வந்தனஞ்செய்பவர்குற்றேவலுஞ்செய்யுமாயனது
பைந்தகைமார்பிற்குடியேறிவாழும்பதுமமகள்
சொந்தமெல்வாயுரைதந்தாளினேகவித்துன்பமறு
மந்தரத்தோர்நிலத்தோர்பிலத்தோரென்னனைவர்க்குமே. (௫௪)

அனைவரும்போற்றுநெடுமாலுநீயுமடற்கருடன்
றனையெழில்வாகனமாக்கொண்டெனுள்வருஞ்சத்தியத்தைப்
பினையுள்ளபோறியத்தக்கவாறருள்பெய்வதென்றோ
மனையெனத்தாமரைப்பூவையெல்லாங்கொள்ளுமாணிக்கமே. (௫௫)

மாணிக்கமேனியுடனுன்னைநாடிமலர்சொரிந்து
பேணிக்கைகூப்பும்பயனிந்தவாறிங்குபெற்றிருந்து
மாணிக்கனகமுளார்தங்களாண்மைகண்டஞ்சிமுக
நாணிக்கவிழ்தரலாமோபொன்போலுநளினமின்னே. (௫௬)

நளினந்தொறும்வளர்நங்காய்நின்கொண்கனென்னற்றமிழ்க்காப்
புளினம்பொலியல்லிக்கேணியிற்றந்தபுதியகைச்சீட்
டொளிர்கின்றசத்தியமாகாவிட்டாலந்தவூறனக்கே
களிறுண்டவெள்ளிற்கனிபோன்றுள்ளேனிலைகண்டருளே. (௫௭)

கண்டங்கரியன்முழுதுங்கரியன்கடகரிய
னண்டங்கடந்தவனாதியதேவரனைவருநின்
றொண்டன்பினாலுய்ந்துளாரோவென்றோருமென்றுன்பொழித்தா
ளொண்டங்கமேனித்திருவேயெச்சீருமுடையவளே. (௫௮)

உடைமணிச்சேயுருவாத்திருமாலிவ்வுலகில்வந்தாற்
பெடைமயிற்சாயல்வடிவாகித்தானும்பிறக்கவொல்காள்
படைமலர்த்திண்கரத்தங்கசவேளைப்பயந்தபண்பாற்
கடையுக்தீனருமெள்ளாதசீர்கொள்கனகமின்னே. (௫௯)

கனகம்பொருளலவென்பாரைவன்சினக்காலன்வெளவு
மனகமதேயென்றுளார்சித்தராய்விண்ணிலாடல்செய்வார்
தனதனைத்தோழமைக்கொண்டானென்பாம்பணிச்சம்புவுமென்
மனதறிமாமலராளருளில்லவர்மாந்தரன்றே. (சுய)

மாந்தரிற்சிற்சிலரைத்திருமாலென்றும்வண்புலவர்,
தீந்தமிழ்ப்பாடல்களாற்செப்புமாறுஞ்செயத்தக்கநீ
பாந்தளிற்றீயமிடியாலெற்றுன்பப்படுத்தனன்றோ
வேந்தலர்ப்பீடத்துளாயண்டகோடிமுற்றீன்றவளே. (சுக)

ஈன்றாளிகழவுஞ்செய்கின்றபாழ்மிடியிற்கயங்கு
நான்றானிற்போற்றத்துணிந்தேன்கொலோவுன்றனல்லருளுட்
டோன்றாதுநின்றெனைத்தூண்டியதோவுண்மைசொற்றருள்வாய்
போன்றாரிலாத்திருமாலூரத்தேவளர்பூங்கிள்ளையே. (சுஉ)

பூங்கணைமாரனைப்பெற்றாய்சகலபுவனத்தினு
மோங்கருட்கார்முகிலெனுஞ்சங்கவர்ந்திட்டுயர்ச்சியுற்றாய்
வேங்கனற்போலுமென்பாழ்மிடிதீர்க்கும்விறலில்லையோ
மாங்கலியத்திருநூல்சாட்சியாச்சொன்மலர்த்தையலே. (சுங)

மலராதனத்திருந்தாணெடுமாற்கருள்வாழ்க்கைநல்கிப்
பலகோடியண்டமுங்காப்பாளவளைப்பழிச்சுகின்றேன்
சிலர்வாயிற்சென்றிரவாதளித்தாலத்திருத்திகொண்டு
புலவேர்களைந்துபிறவாதவீட்டிற்புகுவனன்றே. (சுச)

வனத்தொடுமாநகருஞ்சமமாமனவாதனைபோ
யினத்தொடுவாழும்பெருங்களிப்பெய்துமிகலழியுங்
கனத்தொடுநேருநெடியோனையாண்டுகமலமுற்றுந்
தனத்தொடுவாழ்மயில்போன்றொளிர்வாளருள்சார்ந்திடினே. (சுரு)

சாரணர்புத்தர்முதலோரும்போற்றத்தரணியுண்ட
நாரணன்மார்பத்திருக்கின்றபாவைநளினக்கையே
காரணநன்மைக்குந்தீமைக்குமென்னக்கழறவல்லார்
பூரணஞானமுற்றோர்மறையோர்சிறுபுந்தியரே. (சுசு)

புந்திக்கலக்கமலிந்துன்னைநாடிப்புலம்புகின்றேன்
சிந்திக்கவல்லனல்லேனென்னையின்னமுஞ்சீரழியே
னிந்திக்கத்தக்கவரும்புகழார்வநிறைவருள்வாய்
வந்திக்கவல்லகுறுமாமுனிபின்வருந்திருவே. (சுஎ)

வருந்திடநீடுங்கலிமுற்றுந்தீரநின்மைந்தன்சொல்லாற்
றிருந்தியநான்மறைத்தேவரெல்லார்க்குஞ்செயமுரைத்தேன்
பொருந்தியபேறுதந்தாரிலராலுனைப்போற்றலுற்றேன்
மருந்திணைச்சொற்றிருவேநீயுமங்ஙனம்வஞ்சியலே. (சுஅ)

வஞ்சிமன்கன்னடதேயாதிபன்சின்மடாதிபரைக்
கெஞ்சியுமென்றனக்கெய்தாதசெம்பொன்பல்கிழவர்பான்
மிஞ்சிடச்செய்யுங்கொடுமையெல்லாமென்றுவிட்டொழிப்பாய்
நஞ்சினுந்தேவரமுதினுஞ்சீர்த்தகண்ணாரணியே. (௬௯)

நாரணிநாரணன்பன்னியென்றோர்வருநாவலர்தம்
பேரணிதானும்பெரிதோங்கும்பாரிற்பிறந்தெய்த்துளே
னீரணிசென்னியன்கைம்மண்டையோட்டுண்டிநீக்கியருட்
சீரணிவெள்ளிவெற்பிற்குடியேறச்செய்செய்யவளே, (௭௰)

செய்யதண்டாமரைப்பூவுடையாளருள்செய்யப்பெறு
வையருமிந்திரன்றானும்பிரமனுமைந்துபடைக்
கையனுமீசனுமாதியர்தாம்பட்டகட்டமெல்லாம்
பொய்யறக்காட்டும்பராசரன்சேய்சொற்புராணங்களே. (௭௧)

புராதனநான்மறைக்கெட்டாதுவாழ்பரிபூரணனை
நிராதரனென்றுரைப்பாரெண்ணிலார்சற்றுநெஞ்சஞ்சிடா
திராகிகர்கூந்தற்றிருமாதுசம்பந்தமெய்தியதாற்
சராசரமீன்றாளெனன்றுரைப்பேனெச்சொற்சத்தியமே. (௭௨)

சத்தியனந்தமுந்தானாகிநின்றசலசவல்லி
சித்தியுமுத்தியும்வேண்டியபேர்க்கருள்செய்யுந்தெய்வம்
பத்தியின்மிக்குயர்பாண்டவர்தூதனைப்பாடுமென்பர்
நத்தியவாறுசெய்யாதிருந்தாற்கெடுநான்மறையே (௭௩)

நான்மறையீற்றினிற்பாம்பின்றலையினடித்தருளுங்
கான்மலர்க்கார்முகிலன்றனைநாடிக்கசிபவர்க்கு
மான்மழுச்செங்கைச்சிவனாதியர்மெச்சுமாண்பருளுந்
தேன்மலர்ப்பீடப்பிராட்டியவேபலசெல்வமுமே. (௭௪)

செல்வச்செருக்கர்மனைவாயிறோறுந்திரிந்தலுத்துச்
சொல்வக்கணைப்பொய்ப்புலவோர்களான்மிகத்துன்புற்றுளே
னெல்வட்டமென்னத்தினஞ்சேவைநல்கியினிதருள்வாய்
வில்வத்தருநிழலின்றலைமேயவியன்றிருவே. (௭௫)

வியப்பாருமுத்தமிழ்ப்பாவெகுவாகவிளம்புமென்னை
நயப்பாரிலாமையினாணுகின்றேன்றுங்கநான்மருப்புக்
கயப்பான்மையோருநடுங்குறுமாறுகனகநல்காய்
செயப்பாவையேதிருமாலென்றுமோவருஞ்சீரணங்கே. (௭௬)

சீரணஞ்செய்யுமிடிநோயிற்பட்டுத்தியங்குகின்றீ
ராரணஞ்சொல்லும்பலகோடிதெய்வமுமாதரித்துக்
காரணகாரியமோராதுவீணிற்கலங்கன்மினோ
நாரணன்றேவியைநெஞ்சகப்பூவிடைநாடுமினே. (௭௭)

# திருமங்கள்ந்தர்தி.

நாடோகருமதிக்கின்றபேறுநளினமலர்த்
தோடுஞ்சுரும்புந்துணையாகவாழுஞ்சுரிகுழலைப்
பாடுமவரும்பணிகின்றவரும்பழுதில்செம்பொற்
சோடுறழ்நெஞ்சகத்தாலெண்ணுவாருங்கொளத்தக்கதே. (எஅ)

தக்கம்வியாகரணம்பரதம்புரைசாத்திரந்தேர்
மிக்கவர்தம்மையுமெண்ணுக்குரோதவிரோதியருங்
கைக்கவரிசெறன்றளித்தான்மனையாட்டிதன்கண்ணருளாற்
செக்களவம்பொனுற்றார்தமைப்போற்றுவர்தெண்டனிட்டே (எகூ)

இட்டுண்டுவாழ்க்கைமிக்கேற்றமென்றேமறையாவுஞ்சொல்லு
மட்டுண்டுதமமுயிர்மட்டளிப்பார்க்கும்பொனுதரமாம்
கட்டுண்டுரலொடுழன்றான்மன்னுமபடிகண்டருளி
மட்டுண்டதாமரைமேல்வசிப்பாளைவழுத்தனனே. (அய)

வழுவற்றசெந்தமிழ்ப்பாடலனேகம்வழங்குமவர்
குழுவிற்கும்வேட்கைபொன்மேலன்றிவேறிலலைகோக்கலுழ
வெழுதுற்றசேதனத்தெமபெருமானமனையீகையதாற்
றொழுதிட்டவளைப்பலவாறுநாளுந்துதிக்கைநன்றே. (அக)

துதிக்கைக்கரியிரண்டாட்டுநன்னீர்நசைத்தோகையன்னாள்
விதிக்கைப்பிரமனையீன்றான்றனெஞ்சத்தின்மேவுமினனுண்
மதிக்கைக்கடலமுதத்தோடுதித்தவளிதையென்னுட்
கெதிக்கைதுயரொழித்தாளினல்லான்முத்திகிழ்ப்படுமே. (அஉ)

கீழோரைக்கெஞ்சியலையாதவாறுகிருபைசெய்திட்
டாழோதவாரியிற்பொல்லாரைவெல்லுமடலுநல்கா
யேழோடொரககாமுள்ளானுரத்திலிருந்துகொண்டே
வீழோர்மையாளரிலந்தோறுஞ்சென்றும்விளங்கன்னையே. (அங)

அன்னையென்றெவ்வுலகுந்தருவான்சொலமுதழியாப்
பொன்னையொப்பாந்திருமேனிப்பிராட்டிபுகழ்ப்பெருக்கந்
தன்னைமெய்யன்பருக்கீவாளென்பாற்சொல்சரதமொன்றுண்
டென்னையதென்செய்யுமோவறியேனென்னினைத்தினரே. (அச)

இனமாயமாதவற்கும்புலவோர்க்குமிரப்பவர்க்குந்
தனமாதியபொருளெல்லாங்கொடுக்குந்தகைவிழைந்தேன்
கனமானமேனியம்மான்மனையாட்டிகடைக்கண்களென்
மனமாமலர்த்தொட்டவாறெனைத்தீண்டிலவ்வாழ்வெய்துமே. (அரு)

வாழ்வுவரினுமனைதோறிரந்துண்டுமாழ்குபெருந்
தாழ்வுவரினுந்தமியேன்மறக்குந்தகுதியவோ
வாழ்வுறுஞ்சிந்தைப்புலவோர்பல்லோர்தொழுமாளரியும்
வீழ்வுறுஞ்செம்பொற்றிருமாதுதாட்டுணைமென்மலரே. (அசு)

மென்மதம்வன்மதமாயிருகூறும்விரும்புவது
தன்மமெல்லாஞ்செயத்தக்கதுவேதந்தனிற்பிரியுங்
கன்மமுன்னுகுமுக்காண்டருநாளுங்கருதுவது
பொன்மலர்ப்பாவையருளால்விளையும்பொருட்குவையே. (அஎ)

பொருளல்லவரையும்போற்றிடச்செய்யும்பொன்னெனவே
தெருளுமுன்னூற்றலைசெப்பிடச்சேட்டுஞ்செருக்கதனு
விருளுநெஞ்சத்தினரேத்தெடுகொர்புவியேழுமுண்டோன்
மருளூறத்தாக்கும்விழியாடனதுமலிபுகழே. (அஅ)

பலியுங்கருணைதிருமாதுநீக்கலுமவானவாசி
றொலிதங்குபாற்கடற்புகக்துநல்சலுமுற்றதுங்கேட்
டலியன்றியாணன்றிப்பெணணன்றியன்னவையாயநிசழுமா
னலிவின்றியனமொாபிணையேமிகநன்னுதுமே. (அகூ)

நண்ணலர்சேனைநலங்குலைப்டாாசெங்கைஞாயகரினு
முண்ணலுடுத்தலபலலோர்க்கிடுவாாதமதுளளதிலும்
வெண்ணைகைப்பாவையர்மங்கலமியாவினுமவேததநினும
பண்ணவாபோற்றுந்திருமாதுகண்ணருடபாாவையுணடே (கூ0)

உண்டற்குவேண்டுமவையுமெயதாதிங்குழல்பவைத்
தொணடாகொர்தூதனுமாநெடுமால்புணாதொனமனையி
கணடற்புதககருணைக்கடலாட்டிடிற்கணணிமையா
வணடாககுமேலவராய்த்திகழ்வாரெனசொலன்றிதுவே. (கூக)

அன்றைகெனசொறபனதேவந்துகூறியவற்புதசசொல
லொன்றைககருதிமிகமகிழ்ந்தேன்பயனுணகிலனீ
யென்றைகினியருள்வாயசிறிதேனுமினநீயினன்றுங
கொன்றைச்சடைததம்பிராணறவகையாநிசழ்கோமளமே. (கூஉ)

கோமளச்செசதிருமங்கைகல்லாள்சினைக்கொணடலவெட்குருஞ்
சாமளமேனிப்பிரான்மனையீண்டென்றனதுநிலைக
காமளவிற்றயைசெய்கின்றிலாளயர்நதேனையகோ
தாமளவாததவதத்ருயற்காமொசொற்சாறறுமினே. (கூங)

சாற்றணியாலயந்தோறுநிலாவற்குந்தாரணியின்
மேறறவதோர்குழககூடிககுலாவற்கும்வேறைைக்கு
மாற்றனல்குங்கடைக்கண்ணுள்செந்தாமரையாளெனவே
தேற்றவல்லாரையிகழ்வாாபலருஞ்சிதடர்களே. (கூச)

சிதனடியாரிற்சிலாக்குஞ்சருணைசெயுங்கமலை
புதனிகர்பாவலாபல்லோாவருந்துறப்புணசெயகின்று
னிதமருள்வாளெனநானய்பியேயினிதேத்துகின்றேன்
மதலையர்தம்மிடைகூட்டிககொணடானனறுமாநிலமே. (கூரு)

மாநிலமங்கைதனக்கினியாட்குமலர்மகட்கு
வேனில்விழாமந்தற்பெற்றாட்குத்தண்பொலிவெண்கடலிற்
பானிலவோடுமுதித்தாட்குப்பாடல்பகருமவ
ரானியில்பேறடைவாரொன்றுதேறலரிதரிதே. (கூசு)

அரிமாமுகங்களோராயிரத்தோடுற்றரிகனக
னெரிநாணுஞ்செங்குடர்மாலையிட்டாடவிடும்பொழுது
முரியானெனைநோர்ந்தணைத்தின்புறும்பாவையென்னோர்கலிப்பேய்
பெரிதாமென்றஞ்சுங்கொலோபுலவீர்கண்டுபேசுமினே. (கூஎ)

பேசுஞ்சதுமறைத்தெய்வமெலாமென்பெருங்கலித்தீ
வீசுஞ்சுவாலைகண்டஞ்சியொதுங்கிவெதும்பினநீ
யேசும்பழியடைந்தாலடியேனிவணெங்ஙனுய்வேன்
மாசுண்டநெஞ்சருணராதசீர்த்திருமாதரசே. (கூஅ)

அரசநிழலைத்தொழும்புலைப்புத்தரருவருக்கும்
விரசமதச்சரும்வாழவைத்தாயெற்றைவிட்டுவிடேல்
சிரசதின்மெய்யடியார்பதத்தூணமிகச்சேர்த்துளன்காண்
சரசகுணத்திருமாலருளாயதனிப்பொன்மினே. (கூகூ)

தனிப்புறமோகமுயன்றுதரித்துத்தழைமலர்பெய்
தினிப்புறத்தோர்க்கிமுஞ்செய்யவல்லவர்க்கெத்திசையுந்
தொனிப்புறகீர்த்திகல்கிக்கலியாதிபதுன்பொழித்துச்
செனிப்புறுகன்மமுந்தீர்ப்பாள்கமலைத்திருமகளே. (௧00)

திருமகளந்தாதி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நேரிசை வெண்பா.

செப்புமருமைத்திருமகளந்தாதிமுற்றுந்
தப்புவராமற்றதிக்கந்தகவர்க்கு—முப்புவனத்
துள்ளவரும்போற்றமுயர்வுண்டாயோர்காலு
மெள்ளரியவீடுமெய்துமே.

தெய்வமே துணை.

வாழிவிருத்தம்.

பார்வாழிவான்வாழிபழுதிலசதுமறைவாழிபதின்மர்செஞ்சொற்
சீர்வாழிதிருவரங்கத்தலம்வாழியரவணையிற்றிருமால்வாழி
பேர்வாழியெட்டெழுத்தும்வாழியவற்றொன்றேனும்பிடித்தோர்வாழி
கார்வாழிதவம்வாழிநன்மையெல்லாமிகவாழிநாளுந்தானே.

குருபாதமேகதி.

எல்லாம்வல்லசித்தகுருதுணை.

சென்னை சீவரட்சார்த்த சித்தர் சபாலய

# தருமவைத்தியசாலை.

சபைகிதியின் உத்தேசங்கள்—அநாதிதொட்டு வழங்கிவந்த நமது மகான்களாகிய அகஸ்தியராதி முனிபுங்கவர்கள் திருவாய் மலர்ந்தருளிய சுதேச மந்திர யந்திர வைத்திய சாஸ்திரங்களும், கற்பமாதி அருமையான மகா அவுஷதங்களும், காலவித்தியாசத்தால் நாளுக்கு நாள் குறைந்து, மறைந்து, இன்னுஞ்சிலநாளில் முற்றுமில்லையென்னும்படியாய் விடுமென்று பயங்கொண்டு ராஜதானியாக விளங்குஞ் சென்னைமாநகரத்தில் நிராதாரவான சுதேசநோயாளிகளுக்கும் ஆதிசைவாள்முதலிய வைதிகாளுக்கும் உண்டி முதலியவைகளையிட்டுத் தருமவைத்தியஞ்செய்ய அகஸ்தியர்கூடமென ஒருசுதேசவைத்தியசாலைகட்டி அதில் சீவரட்சார்த்த மந்திர யந்திர வைத்தியசித்தர் சபையெனவொன்று தாபித்து, அக்கூடத்தில் இதுகாறும் அச்சிட்டது மச்சிடாததுமான சுதேசமந்திர யந்திரவைத்திய சாஸ்திரங்களைச் சேகரித்து ஆயுள்வேதநிலையமொன்றுண்டாக்கி, பற்பல மகா அருமையான சாஸ்திரங்களைத்தழுவிய சுதேசஔஷதங்களை முடித்து அங்குவரும் ஏழை நோயாளிகளுக்கும் சுதேசவைத்தியர்களுக்கு மற்றுமுள்ள ஔஷதாபிமானிகளுக்கும் உபயோகமாகும்படி "சிவஞானயோகிகள் மருந்துசாலை" ஏற்படுத்தி மாதந்தோறும ஆயுள்வேதப்புலவர்களால் பிரசங்கஞ் செய்வித்தும், மகாமந்திரங்களின் இரகசியத்தையும் யந்திரங்களின் உண்மையையும் வைத்தியங்களின் அனுபவங்களையும் தக்கபுத்திமான்களுக்குக் கற்பித்துவரும் பாலசுப்பிரமண்ணிய வைத்தியகாலேஜு-ம வொன்று ஏற்படுத்தவும், சுதேசவைத்திய உபகாரங்களைப்பற்றி "சென்னை சித்தர் சபாபதி" என்ற வைத்திய பத்திரிகை எழுதிவரவும், சர்வஜன உபயோகமான சிவசாருண்ணியமாகிய காரியத்தை மேற்கொள்ள அடியிற்கையொப்ப மிட்டிருக்கும நாங்களெல்லோரும் தற்காலம் சென்னை குஜிலி நயினியப்ப நாயகர் தெருவு ௧௬-வது நெம்பர் வீட்டில் ஒரு சபையாராகச் சேர்ந்திருக்கிறோம். மற்றுமிவற்றின் விரிவை இப்போது அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கும், *சீவரக்ஷார்த்த மந்திர யந்திர வைத்தியநூலில் விளங்கக்காணலாம்.

---

* விலை அணா மூன்று சபையிலும், சைதாபேட்டை சேஷாசலமுதலியார் வீதியிலிருக்கும் வித்துவான் திரு. நாராயணசாமி முதலியார் குமாரர் திரு. சடகோபமுதலியாரிடத்திலும், இந்து தியலாஜிகல் யந்திர சாலையிலும் பெறலாம்.

உ

முருகன் துணை.

## பாயிரம்.

—*—

### நேரிசை வெண்பா.

செந்தமிழ்க்குவாய்த்த திருச்செந்திற்பதிவாழுங்
கந்தனுக்குப்பிள்ளைக் கவிசெய்தா—னந்தோ
திருமாதுசேர்மார்பன் றேர்ப்பாகற்கன்பு
தருமால் பகழிக் கூத்தன். (௧)

### அவையடக்கம்.

அத்தனையும்புன்சொல்லே யானாலும்பார்வேந்த
ரெத்தனையுங்கண்டுமகிழ்ந் தெய்துவார் - முத்தி
புரக்குமரன்றந்தகந்தன் பூணணிமுந்நான்கு
கரக்குமரன்பிள்ளைக் கவி. (௨)

உ

சிவமயம்.

# திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ்.

காப்புப்பருவம்.

## சிவபெருமான்றுதி.

உடல்வளைகுழவி மதியமுநதியு முரகமுமொழுகு செஞ்சடைக்கா
ட்டின, ருமைமுலைக்குழையமருவியபுனிதருமைகொடுபரவுதொண்டரைக்
காத்தவ. ருமிழ்திரைமகர சலதியில்விளையு முறுவிடவடவைகண்டமட்
டேற்றின, ருடைமணிகனகபரிபுரமுரல வொருமுறைபவுரி கொண்ட
மெய்க்கூத்தினர், வடவரைமுதுகுநெளிநெளிநெளிய வரிசிலையெனவோ
ரம்பினைக்கோத்தவர், மருவறுமுழுவெண ணிலவெழுமுறுவல்கனரோ
ளியிருள வனங்கெடப்பூத்தவர், மருவியசகள வடிவினரறிய வடகலைதமி
ழை வளம்பெறச்சேர்த்தவர், மதுரையிலிறைவ ரிரசதபொதுவர் மணம
லிபதவுதங்களைப்போற்றுது- மிடவியமதுர வரியளிகுமிறி யிடறியகள
ப குங்குமத்தூட்பொதி. யிமசலமொழுகு கனதனவிரக மெழுகுறவனி
தை சிந்தையிறசேர்ப்பனை, யிடிபடுமுரச முழவுடனதிர வெதிர்பொரு
நிருதர் தம்படைப்போர்க்கள, மிடமறமுதிய கழுதுகணடன மிடவடல்
புரியு மொய்ம்பனைத்தூற்றிய, கடகடவமுழை முகமுளகடவுள் கருணை
யின்முதிய தம்பியைப்பார்ப்பதி, கரமலரணையில் விழிதுயின்மருவு களி
பெருகுகலை மைந்தனைப்பூப்பயில், கடிகமழ்கருவி னிறைமகள்புதியகல
வியினமுழுகு கொணகனைப்போற்றிசெய், கலைமகளபரவு குமரனைமது
ர கவிதருகுருசில் கந்தனைக்காக்கவே. (உ)

## மகாவிஷ்ணுதுதி.

பூமாதிருக்கும்பசுங்களபப் புயபூதரத்துப்புருகூதன்
போற்றக்ககனவெளிமுகட்டுப் புத்தேள்பரவப்பொதிகைமலைக்
கோமாமுனிக்குத் தமிழுரைத்த குருதேசிகனைக்குணகடற்குக்
குடக்கேகுடிகொண்டிருந்தசெந்திற் குமரப்பெருமான்றனைக்காக்கத்
தேமாமலரப்பொழ்செழும்பொகுட்டுச் செந்தாமரையில்வீற்றிருக்குந்
தேவைப்படைத்துப்படைக்குமுதல் சேரப்படைத்துப்படைக்குமுயி
ராமாறளவுக்களவாகியனைத்துந் தழைக்கும்படிகருதி
யழிக்கும்படிக்குத்தளிசெய்சங் காழிபடைத்தபெருமாளே. (க)

## உமையவள்.

அரிபிரமர்சங்கதம்புகழ்ந்திடு பரசுடையநம்பர்பங்கின் மென்கொடியகிலலோகமுமாதரத்தாற் படைத்தவ, ளரிவைமடமங்கைமென் கனங்குழைதிரிபுரையணங்குகங்கை யம்பிகையசளமா யனுபூதியிற்பூத்த பொற்கொடி, யபிணவைமுகுந்தர்தங்கைசுந்தரியுரகபணபந்திகொண்டகங்கணியமுதமூறியபாடலுக கேற்றசொற்குயி, லறுசமையமுங்கலந்து நின்றவண்மறலிபரவுப்ப்ரசண்டசங்கரிடமுகலாமிதுதானெனப் போற்றுசித்திர, முரிபுருவஞ்சிதிங்கடங்கியதிருமுகமலர்ந்தபைங்கருங்கிளி முதல்விபூரணிஞானவித்தாய்க்கிளைத்தவண், முருகுவிரிகொக்களம் பிறங்கியமணிமவுலி மண்டலங்கொள்செஞ்சடை முடிமனோன்மணி வாலைகற்றுக்குணக்கடன், முகிலமுலைசுமந்து நொந்தசைசிறு மிறுமென மருங்கிரங்கவின்புறு முறுவலாடிய கோமளத்தாறபெறுத்தவண, முறைமுறைமுழங்குகின்ற கிணகிணிபரிபுர மலம்புசெமபதமபுனைமுளரி நானமலர்வாழ்வெனப்போற்றிநிற்குது, முரியபதிவெண்கணங்களுஞ்சதுமறைமுனிவரும்பரிந்துநினகழலுறுதியாமெனநாவெடுத்தேத்திநித்தலு, முளமிகமகிழ்ந்து செங்கரங்களின மலர்கொடுவணங்கியஞ்சலென் றமையுடைமையாயருணியெனக்காத்தருட்பனை, யுடுமுகடதிர்ந்து விண்டலங்களுமரியபகிரண்டமும் பிளந்திடவுகறுதோகைமயூரனைத்தோற்றமுற்றெழு,முபனிடதமந்தரதந்திரங்களில்சமையமி லடங்குமைம்புலன்களி லுலகைகூருமனோகரக்கூத்தனைப்பொரு, தரியலர்நெருங்கு செங்களம்புகு நிசிசரர்துணிந்தவெம்பரந்தலைகழுருபாடல்பிசாகனைப்பாற்கடற்றரு, தாளநகைசெங்கருங்கணிந்திரைகுறமகண்மணமபுணர்ந்ததிண்புயசயிலமோகனமார்பனைத்தேசாட்டிதம்ப்பொதி, தனமுமுலைகயுடைந்துவிண்டரும்பிய புதுநறவுசிந்துபைங்கடம்பணிகருணைசீதளவாகனைக்கோட்டகத்துயர், சரவணமிலங்கவந்தகந்தனை முருகனை விளங்குசெந்திலவந்திடு சமரமோகனவேலனைக்காத்தளிக்கவே.

## கணபதி.

கருணையின்வழிபடு முதியவடனையுடர் கயிலையிலொருமுறையுய்த்தவிதத்தினர், கனவடகிரியிலகச ருகுலமாயினர் கதைதனை யெழுதிமுடித்தகருத்தினர், கலைமதியினையிரு பிளவுசெய்கொருபுடைகதிரொழுகிறுவிய வொற்றைமருப்பினர், கடுநகர்பரமனை வலமுறைகொடுநிறை கனிகவர்விரகுள புத்திமிகுத்தவர், பொருவருமிமகிரி மருவியபிடிபெறுபொருகளிமொனமிகுபொற்புவிளைத்தவர், பொதிபவிழ்நறுமல ரணைமிசை தமதுடல் புளகமெழவொருசத்திதரித்தவர், பொதுவறவிடுசுடர் முழுமணியொளிவிடு பொலிவெழுபவளமதித்தநிறத்தினர், புகர்முகமுடையவர் குடவயிறுடையவர் புகழிருசெவியினிறுத்திவழுத்துது, மிருமையுமுதலிய சிவபரசமையமு மினமையவருலகு மளித்த களிப்பனை, யினை

முரன்மதுகர முறைமுறைபெடையுட னிடறியமுகைவிரிசெச்சைலண
ப்பனை, யிளகியபுளகிதமலைமுலை பரமகளிகலிபபுலவியகற்றுமழுப்பனை,
யிகல்புரிபரசிசி சரர்குலகலகனையெனைவழியடிமைபடைத்திடுகட்பனைய
ருமறையுணாதருபிரமனையமாரு மடிதொழுவிடுசிறை விட்டதிறத்தனை,
யடியவாகொடுவினை துகள்படநடமிடு மழுஇபசரணமளித்தவரத்தனை, ய
ளவறுகலைவயின் முழுதியகுறைமக ளழகினிலொழுகியிருக்குமபக்கனை
யலையெறிதிருநகர மருவியகுமரனை யறுமுகமுருகனை நித்தல்புரக்கவே.

## கலைமகள்.

அவனிபருகியமாதிருவுந்தியி லமருமொருபிர மாவெனுமங்கண,
னரியசதுமறைநாவிலிருந்தவ ளளவில்பலநலையோதியுணர்ந்தவ- டவள
முளரியில்வாழ்வுபுரிந்தவ டவளமணிவடமாலைபுனைந்தவ - டவளவடிவுள
வாணிசுமங்கலிதனதுபரிபுரபாதமிறைஞ்சுது- முலவிமுதுதிடர்பாயவிட
ம்பொதியுரகனமணிமுடிதூள்படமந்தர முலையவெறுசுழனமாருதமெங்
கணு முதறுசிறைமயிலவாகனனின்புற-கவரில்வாலவளைசூழ்கொடுறங்கி
யகமடமுதுகினிமேறநெடுந்திரை- கதறுகடலலைவாயமுருகனபெறுகரு
ணைதருகவிமாலைவிளங்கவே. ௫

## அரிகரபுத்திரன்.

வரியுநீள்சடிலததிடைமகுடராசிதரித்தவர் வளையுநீடுகருப்புவின்ம
துரவாளிகொடுத்தவர் ரரியபூரணைபுட்கலை யரிவைமாரிருபக்கமு மழகு
கூருமகிழ்ச்சிய ரடிவிடாமல்வழுத்துது-முரியநான்மறைநித்தலு முறுதி
யாகவழுத்தியவுவகையாசுகவித்துறை யுதவுநாவலன்முற்றிய - பதியவா
ளைகுதித்தெழுபரவைசூழ்நகர்க்கிறை பழனிவேலனைப்புகழ்பனுவனமா
லைதழைக்கவே.

## பகவதி.

விளையுஞ்செழுந்தேனுடைந்து முகைவிணடொழுகு வெண்டாம
ரைப்பொகுட்டு-வேதாமுடித்தலை முடிக்குஞ்சடாடவியள் வெங்கொ
லைமடங்கலேறி - வளையும்பனிப்பிறைமருப்புக்குறுங்கணொடு மயிடாசுர
ன்சிரத்தில்-வலியநடமிடுகுமரி பகவதிசரோருகமலர்த்தாள்வணக்கமுறு
வா-முளையுந்தடந்திரைத்திமிரதமரக்குழியுவர்ப்பருமகரவேலை- யொலி
யிடுங்குண்டகழிசுவறிமேடாகவே வுள்ளுறைகழித்துநிருதக்- களையுங்
களைந்துகலனணிபுலோமிசைதன்மங்கலநாணளித்தபெருமாள்-கடியமயி
ல்வாகனப்பெருமாளுவந்தெனது கவிமாலைகொண்டருள்கவே. ௭

## கா ளி.

காயுங்கொடும்பகைத்தாருகவிநாசனி கபாலிகங்காளிநீலி-காளிமுக்கண்ணியெண்டோளிமாதரிவிரிகவுரிகலையூர்திகன்னி-பாயுந்தழற்புகைப்பாலைக்கிழத்திவெம்பண்ணம்பணைத்திமோடி - பரசுதரனுடனடனமிடுசூலிசாமுண்டிபாதாரவிந்தமினைவா- மாயும்பெரும்பனுவலாசுகவிமதுரகவி யரிபசித்திரகவிதைவித்-தாரகவியிடுமுடிப்புக்குளமயங்காமலடியவர்க்கருள்குருபரன் - றேயும்பனிப்பிறைத்திருநுதற்கடன்மகளிர் தெண்ணீத்திலங்கொழித்துச்- சிற்றில்விளையாடல்புரியும் திருச்செந்தில்வருசேவகன்புகழ்பாடவே. ௮

## ஆ தி த் த ர்.

வெள்ளப்பெருந்துளியிறைக்கும்பெருங்காற்று வெண்டிரையின்மூழ்கியெழு - வெம்புரவியொற்றைபாழித்தடந்தேரேறிவேதபாரகரிறைஞ்சப் - பள்ளக்கடற்றிரைகலக்கியூழியினிருட் படலமுழுதுந்துடைத்துப்படர்சுடர்விரித்துவருபானிருபதங்கா பொற்பாதமலர்சென்னிவைப்பாமுள்ளக்களிப்பறுவரிவண்டுபெணபாட வோதிமநடிக்கமுள்வா - யுட்குடக்கூன்வலம்புரிமுத்தமுமிழநீரோடையிற்குருகுகாணக்-கள்ளக்கருங்கட்சிவந்தவாய்வெண்ணகைக்கடைசியர்நுளைச்சியருளங்-களிகூருமலைவா யுகந்தவேலனையெங்கள கந்தனைக்காக்கவென்றே. ௯

## முப்பத்துமுக்கோடிதேவர்கள்.

பொதுவிலாடுமத்தற்குநீடு பொருளையோதியொப்பித்தசீலர்
புணரிதோய்நகர்க்குச்சகாயர் புலமைநீதியொப்பற்றகேள்வர்
குதலைவாய்மொழிச்சத்திபாலர் குருதியாய்கதிர்க்கொற்றவேலர்
குறவர்பாவைசொற்கத்தின்மோகர் குமரர்காவலுக்கொத்தகாவன்
மதுரகீதவிற்பத்திவாணர் மகுடவேணிமுத்துத்தரீகர்
மவுனமோனபத்திக்கலாபர் மனையில்வாழ்வுவைப்புற்றநேயர்
முதுமையானசொற்பெற்றநாவர் முனிவர்வேள்வியிச்சிக்குமூணர்
முடிவிலாதகற்பத்தினூழி முதல்வர்தேவர்முப்பத்துமூவரோ. ௰

காப்புப்பருவம்-முற்றிற்று.

## செங்கீரைப்பருவம்.

வெங்காளகூட விடமொழுகுபற்பகுவாய் விரித்துமாசுணமுமிழ்ந்த-வெங்கதிர்மணிக்கற்றையூழியிருளைப்பருக வேய்முத்துதிர்ந்துசொரியக்-கங்காளர்முடிவைத்த கங்காநதிக்கதிர்கடுப்பக்குறுங்கவைக்கோற்-கவரியின்பருமுலைக்கண்டிறந்தொழுகுபால் கதிர்வெயிற்படமுரிந்து- மங்காமவிரசகத்தகடெனச்சுடர்விட மலைக்குறவர்கண்டெடுத்து-வண்டினைக்கொருவிடுஞ்சாரலிற்சரியகுறமகளிருளமூசலாடச்-செங்காவிவிழியருகு பன்

னிருகைமேகமே செங்கீரையாடியருளே- திரைபெறியுமலைவாயுகந்தவடிவேலனே செங்கீரையாடியருளே. க

கறைகொண்டமுள்ளெயிற் றுத்துத்திவரியுடற் சட்செவிப்பணிற லைநெடுங்-காகோதரச்சிரநெளிக்கவடபூதரங்கால்சாயமகரமெறியுங் - துறைகொண்டகுண்டசழ்ச்சலராசியேழுஞ் சுறுக்கெழமுறுக்கெயிற்றச்-சூரன்பயங்கொளச் சந்த்ரசூரியர்கள் செந்தூளியினமறைந்திடத்திண் பொறைகொண்டசுரர்மருவுமண்டகோளகைமுகடுபொதிரெறியநிருதருட்கப்- பூச்சக்ரவாளகிரிகிடுகிடெனவச்சிரப்புருகூதன்வெருவிவேண்டுங்-திறைகொண்டளக்கவரு மயிலேறுசேவகாசெங்கீரையாடியருளே- திரையெறியுமலைவாயுகந்தவடிவேலனே செங்கீரையாடியருளே. உ

ஏர்கொண்டபொய்கைதனி னிற்குமொருபேராசி னிலைசீழ்விழிற் பறவையா-மிதுநிற்கநீர்விழிற் கயலாமிதன்றியோ ரிலையங்குமிங்குமாகப்-பார்கொண்டபாதியுமபறவைதானுகவப்பாதியுஞ்சேலதாகப-பார்கொண்டிழுக்கவது நீர்கொண்டிழுக்கவிப் படிக்கண்டதிசயமெனா-நீர்கொண்டவாவிதனினிற்குமொருபேழ்வாய் நெடும்பூதமது கொண்டுபோய்-நீள்வரையெடுத்ததின கீழ்வைக்குமதுகண்டு நீதிநான்மங்காமலே - சீர்கொண்டநக்கீரனைச் சிறைவிடுத்தவா செங்கீரையாடியருளே- திரையெறியுமலைவாயுகந்தவடிவேலனே செங்கீரையாடியருளே.

கந்தமலிநெட்டிதழ்க்குமுகைப்பாசடைக்கமலமலரைக்கறித்துக்
கடைவாய்குதட்டும்புனிற்றெருமைதன்குழக்கன்றுக்கிரங்கியோடிக்
கொந்தவிழ்கருங்குவளை யோடைத்தடாகக்குரம்பைக்கடந்துசெந்நெற்
குலைவளைக்கும்பழக்குலைமடற்கதலிக்குருத்தறமிதித்துமீளப்
பந்தரிடுசூலடிப்பலவுகருமுட்குடப்பழமெலாமிடறிவெள்ளைப்
பணிலஞ்சொரிந்தநித்திலமுழுத்தப்பதபதைத்துமுலைபாலுடைந்து
சிந்தமகராழியலையொடுபொருத செந்தூரசெங்கீரையாடியருளே
செந்நிறக்குடுமிவெண் சேவற்பதாகையாய் செங்கீரையாடியருளே.

வீறுடவெங்கதிர்ப்புகர்முகச்சூரிலை மிகுத்தவேலுறைகழித்து
வெவ்வாய்பிளந்துசிறுகட்பேரிடாகினிகள்விளையாடவெங்கவந்த
மாறுளமுதுபகட்டுயர்பிடர்க்கரியகிற மறலியிருகைசலித்து
மன்றுடஉடல்விழிக்குருசில்கொண்டாடநெடுமோகமுகடிடைவெளியறப்
பாறுடவம்பொற்கிரீடம்பரித்தலகைபந்தாடவிந்தாடவிப்
பாலைக்கிழத்திமுக்கவரிலைச்சூலம்பசுங்கொழுங்குருதிவெள்ளச்
சேறுடவென்றுசிறுமுறுவலாடுங்குமர செகீரையாடியருளே
செந்நிறக்குடுமிவெண் சேவற்பதாகையாய் செங்கீரையாடியருளே. ரு

மகாசலராசிதனில்வருணன்வந்தடிபரவிவைத்தமணிமுத்துமாலை
வடபூதரத்தில்விழுமருவியெனவுத்தரிகமார்பிலூடாடமன்னுங்

தாரமலரிதழ்முருகுகொப்புளிக்குஞ்சிகைத்தமணியச்சுட்டியாடத்
தவளமுழுமதியமுத்துவிரியெனத்திருமுகத்தாளவெயர்வாடமுழுதும்
பகரவருமறைமுனிவர்கொண்டாடமழலாளி பங்காளிதிருமுலைப்பால்
பருகக்குழைந்துசிறுபண்டியுந்தண்டையும் பாதமும்புழுதியாடச்
சிகரவரையாமகளிர்சிறுமுறுவலாடநீசெங்கீரையாடியருளே
செந்நிறக்குமிழிவெண்சேலற்பதாகையாய் செங்கீரையாடியருளே. சு

வேறு,

இந்திரனுஞ்சசியும்பரவும்படியிங்கேவந்தார்கா
ணிந்திரையுங்கரசங்கமுகுந்தனுமிந்தாவந்தார்பா
ரந்தணனுங்கலைமங்கையுமிணைசரணஞ்சேர்கின்றார்போ
வண்டருடன்பலதொண்டர்பணிந்தனரஞ்சேலென்றாளாய்
முந்துகடந்திரையுந்துவலம்புரிமொண்டேகொண்டே
முன்றிறொறுந்தாளங்களுமிழ்ந்திடமுந்நூர்நற்றூருஞ்
செந்தில்வளம்பதிவந்தருளுங்குகசெங்கோசெங்கீரை
தென்றன்மணங்கமழ் குன்றுபுரந்தவ செங்கோசெங்கீரை. எ

வேறு.

உரைசெய்வரையரமகளிர்முறைமுறை யும்பெயர்கொண்டாட
வுலகுமிமையவருங்குமரகுர உய்ந்தோமென்றாட
வரைசெய்வனமுலை மாரளிமொழுவரும் வந்தேபண்பாட
மலையமுனியொடுபிரமமுனிமொழுவங்கார்கண்டாயே
கரையின்மணிவிடுகழியினெடியகலஞ்சேருஞ்சார்பிற்
கரியமுதுபனையடியில்வலைஞர்கணஞ்சூழ்மென்கானிற்
றிரையில்வளைகவழ் நகரில்வருகுக செங்கோசெங்கீரை
செருவினிசிசரதிமிரதினகர செங்கோசெங்கீரை. அ

வேறு.

வரைபொருபுளகித மலைமுலையரிவையர் வந்தார்பந்தாட
மறிகடலிறைதரு நவமணிவடமது வண்டார்தண்டார்பா
ருரைபொருகவிஞரு முனிவருமமரரு முன்போலுணவோதா
னுரையெமர்வழிவழி யடிமையிதுவென வுன்பாலன்பானோர்
கரைபொருகடறிட ரெழுமயின்மிசைவரு கந்தாசெந்தூரா,
கழிமடவனமொடு முதுகுருகொருபுடை கண்சாய்தண்கானற்
றிரைபொருதிருநகர் மருவியகுருபர செங்கோசெங்கீரை
செருவினிலெதிர்பொருதிசராதினகரசெங்கோசெங்கீரை. கூ

வேறு.

குறுமுகைவிண்டநெட்டிலைத்தாழைபடியில்விளைந்தமுட்குடக்கா
யிலிளியகுவளையோடையில்விண்டோயுந்தேவர்- குணலைபுரிந்தகற்பகச்

கற்பகச்சோலைநிழலிநிழனிடுபங்கரிட்டபொற்றாணிலளவர்குடிலில்வாச
லினின்றேடுக்தூணி, குழுவொடுகந்துவிட்டிளைப்பாறு துறையினிளம
ணல்வண்டலிட்டுவெற்றூத பழையபசுமிழிவாயில் வண்டானஞ்சாவும், குர
வுநெருங்குமெக்கரிற்கானற் கழியிலுழுநர்பரம்பிவெற்குலைந்காளிலிளை
யகுமரருர்சிறுதிணைடேர்மென்காவி, விழைகுருநம்மையொழுகபொற்பார,
கிலமகளிரிருந்து வைத்தவைப்பூச, லருகிலிளைஞருடலில் வண்டார்த
ண்டாரி-லெவருமகிழ்ந்தசித்திரச்சாலை, நிழலிளவமணிதுன்று தெற்றி
யிற்றேவர், மகுடமிடறுப்புழுதியில்லைங்காளஞ்சினமெனமொழி தங்குமடப்பு
தத்தீவில், வணிகர்விலையிடுகின்ற மிக்கட்டாடை, வகையிலெறியுமார
வடம் பூணும்பூணி, லேரகவர்தெருவிழுக்குளித்தூறு, மளறுகொழு
துகிடங்கிலவித்துமிழ்க்காரத், தாரவிலிகிழுள்வேலியில் வெங்காமன்கா
ண, முறுகவிளைந்து முற்றிமுத்தேறுகரிபலவொளிய கரும்புசுற்றுசிற்று
லை, நிலையினைமுதியயாழியில்வெந்தூறும்பாகினமுடியை விளம்பினைத்
துழட்டாது, கடைசிகொடுவருகின்ற கட்குடப்பானை, மு[illegible]கின்முளை
கொள்சாலியின் மேன்பூகந்தோறு, முருகுதுறும்பு கொத்துடைப்பா
ளை, சிதரிமணிகளுதிர்ந்த பித்திகைப்பட, மறுகின்முதல்வர்தேவியர்பந்
தாடுகாவின் முனியர்விரும்பு கற்புடைபபான்மை, மகளிர்தெளி புனல்
மொண்டெடுத் தகைச்சாலின் மடுவின்முழுகுமேதியிலவம்பேசெஞ்சே
ல்பாய், செறுவில்விளைந்தநெற்குலைக்காயி, லுழுதகெளியிலுடைந்தகட்
டிசிற்பார, மதகுசெறியுமேரியினமணம்தேம்பானல், செருமிமுழங்குகற்
பிளப்பானபுடையின்மடையில் விழுப்புனற்பெருக்கான, தமரதிமிரவா
வியிலெங்கேயுந்தாவும், இளையில்வலம்புரிக்கணத்தோடு, பணிலமுழுது
ந்தவழந்த பட்டினக்காவற், றிகிரிமுருகவேலவ செங்கோசெங்கிரை, இ
ணகரரஞ்சவிட்புலத்தேகர், மறுகமகபதிமுன்குவித்த வித்தார, மவுலி
திரைகொள்சேவக செங்கோசெங்கீரை. (௰)

செங்கீரைப்பருவம்-முற்றிற்று,

## தாலப்பருவம்.

அடரும்பருநவமணி முடிடமரருமமரர்க்கிறைவனுநீ
டளகைநராதிபு மீரொனட்டிளமரு மருமறைமுனிமேவாருஞ்
சுடருக்தருமிரு சுடரும்பரவிய தோகையரெழுவருமுத்
தொழின்முக்கடவுளு மவரவர்தங்குறை சொல்லிதது திசெய்தார்
படருங்கிரணப் பருதிநெடுங்கதிர் பாயும்பகிரண்டம்
பழமரமென்னப் பனைவெனவிரும் பழிக்கைநீட்டித்
தடவும்புகர்முக தந்திக்கிளையாய் தாலோதாலேலோ. (௧)

கங்குல்பொருந்திய குவளைக்குழியிற் கழியிற்பழனத்திற்
கரையிற்கரை பொருதிரையிலவளைந்த கவைக்கால்வரியலவன்
பொங்குகுறுந்துளி வாடையினொந்து பொருதேவெயில்காயும்
புளினத்திடரிற் கவரிற்றுரவிற் புன்னைநறுந்தாதிற்
கொங்குதிரிந்தமடற் பொதிதாழைக் குறுமுட்கரியபசுங்
கோலச்சிறியகுடக்காயிற்புரல் கொழுதுஞ்செய்குன்றிற்
சங்குமுழங்கியசெந்திற்பதியாய் தாலோதாலேலோ
சமயவிரோதிகலிமிரதிவாகர தாலோதாலேலோ. (உ)

வேறு.

தண்டேனொழுகுமொழிமடவார் தர்மங்கொழுகிச் சுருண்டிருண்டு
தமரக்களியனடைகிடந்து தழைக்குநெறித்தகுழற்பாரங்
கொண்டேபொலிந்ததல்லாது குரும்பைபக்களபமுலைசுமந்து
தொமபோனமருங்குசுகுடிவாங்கக் குழையிற்குதித்துவிழிக்கயலைக்
கண்டேவெருவிக்கயனமறுகக் கனகவெயினமாளிகையுடுத்துக்
ககனந்தடவுங்கோபுரத்தைக் கருதிவடவெற்பெனக்கதிரோன்
றிண்டேர்மருகுந்திருச்செந்தூர்ச் செல்வா தாலோதாலேலோ
தெய்வக்களிற்றைமணம்புணர்ந்த சிறுவா தாலோதாலேலோ. (௩)

பாம்பானுசிரனைக்கடந்து படருங்கொடுங்கார்சொரிமழைக்குப்
பரியாவரையைக்குடைசவித்துப் பசுக்கள்வெருவிப்பதறாமற்
காம்பார்விசையினுறணிபலமுத்துக் கதறுந்தமரக்காளிந்திக்
கரையிலொப்பின்மேனடங்க கண்ணன்மருகாமுறையுடைக்கும்
பூம்பாசடைப்பங்கயத்தடத்திற் புனிற்றுக்கவரிமுலைநெரித்துப்
பொழியுமமுதங்கனைக்கரைந்து புனலைப்பிரித்துப்பேட்டெகினந்
றிமைபால்பருகுந்திருச்செந்தூர்ச் செல்வா தாலோதாலேலோ
தெய்வக்களிற்றைமணம்புணர்ந்த சிறுவா தாலோதாலேலோ. (௪)

வேறு.

மங்கலமங்கலநா வெங்குமொழிந்தனர்காண் வானோரானோர்போய்
வந்துவணங்கினர்மேலந்தரதுந்துபிகேள் வாரூடாதே
கொங்கசுமந்திடைநாலுஞ்சுமணங்கனையார் கூடாதூடாரோ
கொண்டவரங்கருவாயண்டாபெருந்தவமே கோமானுமாநீ
செங்கமலந்தனிலே பைங்குமுதங்களிலே சேல்பாய்வானாடா
தென்றலுடனறமிழ்சேர் தெனபொதியம்பயில்வாழ் தேனார்தார்மார்பா
சங்குவலம்புரிசூழ் செந்தில்வளம்பதியாய் தாலோதாலேலோ
சங்கரிதனகுமரா மங்கையாதனகணவா தாலோதாலேலோ (௫)

வேறு.

மரகதவடிவஞ்செய்கதிர்வெயிலால் வாராய்வாடாதோ
மதிமுகமுழுதுந்தண்டுளிதரவே வார்வெடேர்சோராதோ
சரமலரணைதந் தின்புறமடவார்காணாதேபோமோ
கனமணிகுலவுங் குண்டலமனைஞானேடேபோனல்வார்

பொருமியமுலையுந் தங்கிடவுடனே தாய்மார்தேடாரோ
புரவலரெவருங் கண்டடிதொழுவார் போகாய்போதாநீள்
சரவணமருவுந் தண்டமிழ்முருகா தாலோதாலேலோ
சதுமறைபரவுஞ் செந்திலையுடையாய் தாலோதாலேலோ. (௬)

வேறு.

கூருமிகல்சாய்த்த வீரதீராதார்மார்பா
கூறுமியல்பார்த்துன் மேலேபாரார்பாடாதார்
மேருவரைநாட்டுவாழ் வார்வானுடாள்வார்போல்
வேளையெனமீட்டுன் மேலேவீழ்வார்சூழ்வார்பா
ராருமினைபார்த்து நீணீருடேதாராமே
யானகழிநீக்கி மேலேநானாயோடேசேல்
சேருமலைவாய்க்கு நாதாதாலோதாலேலோ
தேவர்சிறைமீட்ட தேவாதாலோதாலேலோ. (௭)

வேறு.

அரைவடமுந்தண்டையுமின்புரை-யரைமணியுங்கிண் கிணியுங்கலணணியுமாருவிரூர்சி, நறுமுகமுங்கொங்கல்சுமந்தபம் - னிருகரமுங்குண்டலமுங்குழை யழகு மாரார்பாராதார், வினைபொருமென்குஞ்சியளமபிப புழுதியுமங்கக்குழைபண்டியு மெலியுமேலே வீழ்வார்பார், வெகுவிதமுங்கொண்டுதவிழ்ந்திடி லவரவர்தங்கண்கள்படும்பிறைவிளையுமேதெனேகாதே, வரைமணியுந்தங்கமு மொன்றியகனபரியங்கந்தனிலின்றுகண் வளரவாராய்வாழ்வேநீ, மணிநகையுங்கொண்டுதாயின்றிலை விரலமுதங்கொண்டுகெடந்தனை மதுரமாய்நீபேசாயோ, இனைபொருதென்செந்தில் வளம்பதிவளரவருங் கந்தசிவன்பெறு சிறுவாதாலோ தாலேலோ, இசைமுகனுஞ்சங்கரியுஞ் சதுமறையுமிறைஞ்சுப்பனையம்பிகை சிறுவா தாலோதாலேலோ. (௮)

வேறு.

அரவுசிறுபிறையிதழி இயபதகைபொதிசடிலர் பாலாவேலாதேரருணவெயிலிரவிசுழ விமகிரியிலரிவைபெறுவாழ்வாய்வாழ்வேநே குரவருளமகிழவுபர் குருவடிவுதருபெருமை கோடாய்தாடாளா, குமரகுருபரமுருக குகலைமொழி தெரியவுரை கூறாய்மாராதே, யிரவலருமுனிவர்களு மிமையவருமுனதடிமை யாமேயாமேநீ, யெனைமுனிபிலொருதுணையு மிலையடிமையடிமையெனவீழ்வார்சூழ்வார்பார் பரசமயகுலகலக சிவசமயகுலதிலக தாலோதாலேலோ, பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்தாலோதாலேலோ. (௯)

வேறு.

பங்கயன்முதலோ ரிந்திரனிமையோர் பாரோரேனோர்பார், பண்புடனுனையே சிந்தையினினைவார் பானீமால்கூறாய், வெங்கடகரிசூழெண்டிசையுறைவார் வீறாள்காறாதே, மின்பரிபுரதாள் பொன்புனைமுடிமேல் வேய்வாவீராலே, செங்கனிமணிவாய் தங்கிபகைதாதேவாசீறாதே, திண்டிறன்முருகா தண்டமிழ்வீரகா சோரார் போரேறே, சங்கரிமருகாசங்கரிசிறுவா தாலோதாலேலோ, சந்ததமியல்சேர் செந்திலையுடையாய் தாலோதாலேலோ. (௰)

தாலப்பருவம்-முற்றிற்று.

## சப்பாணிப்பருவம்.

பரவரியகவாணி யழுத்துகலனுக்கழகு பாலித்துவீறுபெற்ற, பன்னிருபுயங்குலுங்காமனீள் குழைதொறு பருவயிரகுண்டலங்க, ளிரவியொளிமட்கவின் றசையாமலமுகொழுகு மிந்துமுகமண்டலத்திலெழுகரிய திருநுதற்புண்டரங்குறுவெயர் விறைக்கச்சிந்தைந்திடாமற், கரகமலமலர்விரல் சிவப்புறுமற்கடக கங்கணமொலித்திடாமற், கழிவண்டலம்புங் கருங்குவளையோடைசூழ் கழிதொறுக்காளைறேறுந் தரளமுழுமணிநிலவுதருசெந்தில்வேலவா சப்பாணிகொட்டியருளே, சமரமுகரணவீர பரசமயதிமிராரி சப்பாணிகொட்டியருளே. (௰க)

அண்டர்கள்துயரொழித்தனமென்று கொண்டாடியாவலங்கொட்டமன்னு, மயிராணிகலவியமுதுண்டனமெனத்தேவ ராசிருகரங்கள்கொட்டத், துண்டவெண்பிறைபுனை யெயிற்றுவெஞ்சூருளந்துண்ணெனப்பறைகொட்டநீள், சுருதியந்தணரிடந் தொறுமங்கலப்பெருந்தூரியங்கொட்டமுட்டப், பண்டருபெருங்கவிட்புலமைக்குநீசொன்னபடிதிண்டிமங்கொட்டவெம், பகைநிசாசரர்களம்பதிமுழுதநெய்தலம்பறைகொட்டவெள்ளளைதருந், தண்டரளமலைமொண்டு கொட்டுநகராதிபா சப்பாணிகொட்டியருளே, சமரமுகரணவீர பரசமயதிமிராரி சப்பாணிகொட்டியருளே. (உ)

பௌவமெறிகடலாடை யுலகிலொருவேடுவன் பறவைக்குநிறைபுகுந்த, பார்த்திபன்பாவையுமிபத்குலச்சிறையும்பணித்தருளமதுரைபுக்கித், தெவ்வரிடுதிருமடத்தெரிசெழிய னுடலுறச் சென்றுபற்றலுமெவர்க்குந், தீராதவடவைவனல் வெப்புமுதுகூனுந் திருத்தியொருவாதுவென்று, வெவ்வழலிலெழுதியிடு மேடும்பெருக்காற்றுவிட்டதமிழேடுமொக்க, வேகாமலெதிரேகுடக்கேறவெங்கழுவில்வெய்ப்பசமண்மூகரேறச், சைவநெறியீடேறவருகவுணியக்குழவி சப்பாணிகொட்டியருளே, சமரமுகரணவீர பரசமயதிமிராரி சப்பாணிகொட்டியருளே. (௩)

பைங்காடமைச்சிறைக் கானவாரணமருவு மஞ்சரிடுமுல்லைவேலி பாயுமுட்டணைமருப் பேறுகமுவியு முடைப்பாலருமேனிமடவார், கொங்கார்குரும்பை யிளவனமுலை முகக்கோடு முத்தக்குருந்தொசித்தும், குறுங்கழைத் துண்டங்கனிம் சிறுதுளைக்கருவி துன்றுருவ நின்பணைக்குழல், செந்தாமரைக்கனை விரல்கொண்டு புதைத்தஞ்சுருதி பெரியவிரன்முறைமையில்விட்டுந், தேனுவின்பிறகே திரிந்துங்கவுட்குழி திறந்துமதமாரிசிந்துந், தந்தாவளந்தனக் குதவு திருமான்மருக சப்பாணிகொட்டியருளே, தரளமெறிகரையில்வளைதவழ்செந்தில்வேலவா சப்பாணிகொட்டியருளே. (௪)

கார்கொண்டபேரண்ட கூடமோரேழ் நீசுட்டிச் சூழ்த்திராசாலை, கற்பதாருவின்புயத் திலுக்கணிமாலை சுட்டவளர்க்கும் அனைஞ், சீர்கொண்டபுருகூதனுக்கேவர் குழுவுமின் திருநாமமறவாதபேர், சிகரகனகாசலமுமுனதுதிருவாபரண சேர்வைசேர் பேழைகடணீர், போர்கொண்ட வேலின புலால்கழுவு நீர்மூழ் பொழிலுமத்தனைதீவுமோர், பொலிவினுடனேநின் கலாபமயில்வையாளி போய்நீளுநம்பி யென்றே கார்கொண்டமணிமார்ப செந்திலடிவேலனே சப்பாணி, கொட்டியருளே, தரளமெறி கரையில்வளை தவழ்செந்தில் வேலவா சப்பாணிகொட்டியருளே.

கவளமகவெற்புநிலை யுலருபரவைப்ரணைமொன் கைத்தாமரைக்கடகபூண், கதிரொளிவிரிக்கவளர் சிறையிலிடு சுட்டிமிசை கட்டாணிமுத்தொளிரவே, பவளமிகழ்புத்தமுகமொழுகுமகலைசருகலைபற்பாதிசொற்றெரியவே, பரிபுரமொலிக்கவரு குறுநகையெழுப்பியிடு பைச்சேடனுச்சிகுழிபா, யுவளகமனைத்துமின வரிவளைமுழக்கவெடியுற்றேபெருக்தகயல்போ, யொருயுடைகுதிரகவரி யலவனைணையிற்புகுகவுப்பூறுகெட்ட சழிதோய், தவளமணிமுத்தையலையெறியுகருச்கதிபசப்பாணிகொட்டியருளே, சருவியபுறச்சமைய விரதியர்குலக்கலக சப்பாணிகொட்டியருளே. (௬)

வே று.

கருதியதாளியமணியனைவடமிடுகட்டுவடத்தோடுங்
கழலிடுபரிபுரமொலியெழமணியுமிழ் கைக்கடகப்பூணு
மிருசுடரொளிபெறமருவியதிரள்சடையிட்டுமெதிப்பாக
வெழுமதிபுரைதிருமுகமலர்குறுவெயரிட்டுவரத்தாமஞ்
சொருகியநறுமலர்முகையவிழ்சிகையிடு சுட்டிநுதற்றூழத்
தொழுதணைவழிபடுமடியவரினையகர்சொற்படிதப்பாமற்
குருமணியலையெறிதிருநகரதிபதிகொட்டுகசப்பாணி
குருபரசரவணபவசிவமழவிடை கொட்டுகசப்பாணி. (௭)

வரைபுரைபுயமிசையிடுதொடியணிகலன்மற்றுளமுத்தார
மணிமுடிகுழையிடுமிருசிகையழகெழ மைக்குவளைப்போதின்
விரைசெறிகுழலியர்செவிலியரவரவர்மிக்கவிருப்பானார்
விபுதருமுனிவருமுனதடிபரவியுன்வெற்றியுரைப்பார்சீ
ரணிமணியுடைமணிகணகணகணவென வத்திமுகத்தோனு
மரிபிரமனுமுமைகணவனுமனமகிழுற்புவிளைத்தார்பார்
குரைகடலலையெறிதிருநகரதிபதிகொட்டுகசப்பாணி
குருபரசரவணபவசிவமழவிடைகொட்டுகசப்பாணி. (௮)

வேறு.

கந்தக்குகட்டினர விந்தத்தனிக்கடவுள் கற்பாவெனம்சுருதிநூல், கண்டித்துரைத்திடவு மிந்தக்கரத்திலுள கற்பாலுரைத்தியெனவே, யந்தப்பொருட்பகுதி யங்கத்திளைப்பகரு மப்போதுவெறுத்துமுனிவா, யஞ்சத்திருக்குமய னஞ்சச்சிறைக்குளிடு மப்பாசிறக்குமமலா, பந்தப்பிறப்பொழியவந்தித்திருக்குமவர்பற்றாகநிற்குமுதல்வா பண்டைக்குடத்திலுறுமுண்டச்சிறுத்தமுனிபற்றாசையுற்றுமகிவாழ், சந்தப்பொருப்பிறைவ செந்திற்பதிக்குமர சப்பாணிகொட்டியருளே, சங்கத்தமிழ்ப்புலவ துங்கக்கொடைக்குமர சப்பாணிகொட்டியருளே. (௯)

வேறு.

முதுமொழிவிளைவு தெரிந்தநாவலர் முட்டாதுனைப்புகழவே, முளரியின்மருவி யிருந்தநான்முகன் முக்காலுமிச்சைசொலவே, புதுமலர்சிதறி மகிழ்ந்துவானவர் பொற்றாளினைப்பரவவே, புகலருமிசைதெரிதும் புராதியர்புக்காதரித்துவரவே, மதகரமிடறிய தொங்கன்மாலிகை மற்பூதரத்தசையவே, மணியொளிவயிரமலம்புகோள்வளைமட்டாய்நெருக்கமுறவே, சதுமறைமுனிவர்கடங்களுபக சப்பாணிகொட்டியருளே, சரவணபவகுக செந்தில்வேலவ சப்பாணிகொட்டியருளே. (௰)

சப்பாணிப்பருவம் - முற்றிற்று.

## முத்தப்பருவம்.

கத்துந்தரங்கநெடுஞ்செறியக் கடுஞ்சூலுளைந்த வலம்புரிகள் கரையிற்றவழ்ந்துமாலுகத்திற் கான்றமணிக்குவிலையுண்டு, தத்துங்கரடவிகடதட தந்திப்பிறைக்கூன்மருப்பில்விளை, தரளந்தனக்கு விலையுண்டு தழைத்தகழுத்துவளைத்தமணிக், கொத்துஞ்சுமந்தபசுஞ்சாலிக் குளிர்முத்தினுக்குவிலையுண்டு, கொண்டறருவித்திலந்தனக்குக் கூறுந்தரமுண்டுன்கனிவாய், முத்தந்தனக்குவிலையில்லை முருகாமுத்தந்தருகவே, முத்தஞ்சொரியுங்கடலலைவாய்முதல்வாமுத்தந்தருகவே. (௧)

வளைக்குந்தமரக்கருங்கடலின் வளைவாயுகுத்தமணிமுத்தன், வடி
வேற்கறைபட்டுடல்கறுத்து மாசுபடைத்தமணிமுத்தம், துளைக்குங்க
ழையிற்பருமுத்தந் துளபத்தொடைமா லிழம்பருகிர, றூற்றுந்திவலை
தெரித்தமுத்தஞ் சுரக்கும்புயலிற்சொரிமுத்தம், திளைக்குங் கலைமயிற்
சிறையிற் சிறுதூட்பொதிந்தகுறுமுத்தஞ், செங்கெண்முத்தங் கடைசியர்
காறேய்த்தமுத்தஞ்செழுந்தணமேடன், முளைக்கும் குமுதக்கனிவாயா
ன் முருகாமுத்தந்தருகவே, முத்தஞ்சொரியுங் கடலலைவாய் முதல்வா
முத்தந்தருகவே. (௨)

கலைப்பால்குறைத்தபிறைமுடிக்குங்கடவுளுடலில் விளையோகங்க
ளலிகரத்திலளிக்கவங்கக்கனலிபொறுக்க மாட்டாமன், மலைப்பால்விளங்
குஞ்சரவணத்தில் வந்துபுகுதவோராறு மடவார்வயிறுசூலுளைந்து மை
ந்தராறுவர்ப்பயந்தெடுப்பக், கொலைப்பால்விளங்கும்பரசுதரன்குன்றிலவ
ளைக்கொடுசெல்லத், கூட்டியணைத்துச் சேரவொரு கோலமாக்கிக்கவுரி
திரு, முலைப்பால்குடித்தகனிவாயால் முருகாமுத்தந் தருகவே முத்தஞ்
சொரியுங் கடலலைவாய் முதல்வாமுத்தந்தருகவே. (௩)

கத்துங்கடலினெடும்படவிற் சுழியிற் சுழியிற் கழுநீரிற், கானற்க
ரையிற்கரைநிகழுங்கைதைப்பொதும்பிற் சுரும்பினங்க, டத்துங்கமலப்
பசும்பொகுட்டிற்சாலிக்குலையிற்சாலடியிற், றழைக்குங்கலிப்படிமடலிற்
றழைமுகைத்துழுகமுதுகுரம்பைக், குத்துந்தாங்கப்புனற்கவிரிற்குவளைத்
தடத்தின்மடைவாயிற், குடக்கூன்சிறுமுட்பணிலமொரு கோடிகோடி
யீற்றுளைந்து, முத்தஞ்சொரியுங்கடலலைவாய் முதல்வாமுத்தந்தருகவே
மொழியுஞ்சமையமனைத்தினுக்கு முதல்வாமுத்தந்தருகவே. (௪)

வயலுஞ்செறிந்த கதலிவன மாடஞ்செறிந்த கதலிவனம், மலர்க்கா
வெங்குந்தேனினிரை மலைதோறுந்தேனினிரை, புயலுஞ்செறிந்தகன
கவெயிற் புடையேபரந்தகனகவெயில், பொதும்பர்தோறுமோதிமமென்
புளினந்தோறுமோதிமஞ்சேர், கயலுஞ்செறிந்தகட்கடையார்கலவிதரு
ம்போர்கட்கடையார், கருணைபுரியுமடியாருங் காதல்புரியுமடியார்சீர், மு
யலும்படிவாழ்திருச்செந்தூர் முருகாமுத்தந்தருகவே. (௫)

தொழுதுந்துதித்துந்துயரகற்றிச் சுராக்கிறையுஞ்சுராருமுடன், சூ
ழ்ந்தகடம்பாடவியிலுறை சொக்கக்கடவுடனைமுன்று, பொழுதும்பரவி
யெழுத்துச்சொற் போலப்பொருளும்புகறியெனப், புகலுமாறஞ்சிரட்டி
இணைப் பொருட்சூத்திரத்தின்பொருண்மயக்கா, தெழுதும்பனுவற்பா
ணன்முதலேழ்பெருநமக்கவிப்புலவ, ரினைதயங்களிக்கவிருப்பமுட
னிறையான்பொருட்குப பொருள்விரித்த, முழுதும்பகர்ந்தகனிவா
யான் முருகாமுத்தந்தருகவே, மொழியுஞ்சமையமனைத்தினுக்கு முத
ல்வாமுத்தந்தருகவே. (௬)

வேறு,

கடுங்கடைச்சிந்தரமருப்பின் கதிர்கொண்முத்தஞ்சரவைகீள் கடலளிக்கும்பணிலமுத்துங் கழையின்முத்துஞ் சுரும்வா, னுடுமுகட்டிப்புயல்காருக்கொண்டுபிறப்புந் தந்தருகவே, னெழுகுவெற்பங்கய மடற்றங்கொளிருமுத்தங்கிருகல்காண், பிசைக்கருணைகழிந்தினைபரியமுத்தங்கெரியவே பரவைவெயறந்தினைகொழிக்கும்படியின்முத்தங்கிடுமகார்கொடுபரபபுமடிபுரக்குங் குமாரமுத்தந்தருகவே குறமுனிக்குந்தமிழுரைக்குங் குழவிமுத்தந்தருகவே. (௭)

பருவமுற்றங்குடைவயிற்றெழன் பணிலமொய்க்குந்துறையெலாம் பருமரட்செங்கயல்குதிக்கும் பவடக்கெண்டிரை பகீர், பொருதுகுத்துந்திடரனைத்தும் புறவுமொய்க்கும புறவுசேர், புளினவெற்பெங்கணுமிரைக்கும் புளினமொய்க்குங்குவளைவா, யருமடற்கனடிணமெனச்சென்றளிகணமொய்க்கும்புதியகுவலவனமொய்க்குங்குழிமுழிச்செண்டலைகொழிக்குங் கரையெல்லாங், குருகுமொய்க்கும் பதிபுரக்குங்குமாரமுத்தந்தருகவே, குறமுனிக்குந் தமிழுரைக்குங்குழவிமுத்தந்தருகவே. (௮)

வேறு.

பைபரவினுச்சிகுழியப்பொருங்குண்டகட்பகடம்பணிலமுத்தம், பார்வையாலும்சிறிது பாரோமினன்றிப்பசுங்கழைவெடித்தமுத்தஞ், செய்பசிதைபினுமிது வேணுமென் றொருபொழுது சிந்தியோமுத்திவட்டத், திரைமுழங்கக்கொழுந்திங்கள் வட்டக்குடைச்செழுநிழச்சம்புராரியெய்யுமலர்வாளியை யெடுத்துத்தெரிந்து நாணிறுகப்பிணித்தவளவில் வீன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றெணுகோமிதழ்க்கமலமுகையுடைக்கும், தய்யமணிமுத்தந் தனைத்தொட்டே முனைனுடைய துகிரில்விளைமுத்தமருளே, தோனகமேகவாகன செந்திலாயுனது துகிரில்விளை முத்தமருளே. (௯)

இறகல்கருகுதல்முரிவிலட்சுமிபுடாய்முள்ளேறல்புகையேறல்செய்ம, ணேறல்வெச்சந்திருகனமத்தகக்குழிவன்றி யிரவியொளியிற்காரத்தன், மறுவறுதகட்டிலோரத்தி லுயர்தூக்கத்தின் மன்னுமாதளைகவிர்ப்பூமாங்களிர்முயற்குருதிசெவ்வரத்தங்கோபமருவுமணிவகையளிப்பேர் முறுகல்வளியேறல்கல்லேறல்சிப்பிப்பத்துமுரிதறிருகுதல்சிவப்பு, முருந்திற்குருத்துச் செருந்துருவியிடையாடி மூரிகுதைவடிவொதுங்க, றுறுமுகங்கக்கலொளிமட்கல் காடென்னுத துகிரில்விளைமுத்தமருளே, தோகைமேகாரவாகனசெந்திலாயுனது துகிரில்விளைமுத்தமருளே. (௰)

கோதிவருவண்டுமது வுண்டுகுடிகொள்ளுமென் குழலுக்குடைந்துவிண்ணிற், குடிகொண்ட கொண்டற் குறந்துளியி னிதிலக்

பொருகால்விரும்பேக், காதிலுறும்வள்ளைமகரக்குழைகடக்கு மெய்க்கண்ணுக்குடைந்துதொலைக், கயத்திற்குளித்தசெல்வெண்டாளமென்னிலொருகாயிழைக்கருதியவேமே, போதிலுறுபசுமடற்பாளைமெனபூகம பொருந்துங்கந்தரதைப், பொருவுறுவெள்வலம் புரியாமினைபுறேம்பெற்றோடைக்குடைந்த, சோதிவயமுத்தந்தனைத்தொடேன்னுடைய துகிரிலவிளைமுத்தமருளே, கோகைமேகாவாகனசெந்திலாயுனதுகிரில் விளைமுத்தமருளே. ௰௧

முத்தப்பருவம்-முற்றிற்று.

## வாரானைப்பருவம்.

மூரிப்பகட்டுவெரிவாளைமுழங்கிக்குதிக்கக்காய்சாய்ந்து
முதிரவிளைந்தசெடையின்னிமுடங்கும்பசுங்காய்க்குலைச்செந்நெல்
சேரிக்கருங்கைமள்ளர்குயக்கிட்டியரிந்தநெர்க்கிறுக்குத்
தெண்முத்தளம்பசிறுகுடிலிற்சேரக்கொடுபோயவர்க்குவிப்ப
வேரிக்குவளைக்குழியிலரிவெண்சங்கினங்களீற்றலைந்து
மேட்டிலுகுத்தபரிமுத்தைவெள்ளோதிமந்தன்முட்டையென
வாரிக்குவிக்குந்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிகணவாவருகவே. க

புள்ளமரிந்தகதிர்ச்செந்நெற் போரிற்படுத்தனைகருங்கட்
பூட்டியடித்துவைகளைந்து போரக்குவித்தபொலிக்குவையை
விள்ளவரியகுடகாற்றுவீசப்பரடிக்கதிர்க்கி
வெள்ளிக்கிரிபோற்கனகவட மேருகிரிபோன்மிகத்தூற்றிக்
கள்ளமெறியுங்கருங்கடைக்கட் கடைசிபிறித்தமணிமுத்தைக்
களத்திலெறியமுத்தைக் கண்டுகுடித்தகட்குவிலை
மள்ளாளக்குந்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிகணவாவருகவே. உ

தேடவரியமணியணைநாண் சேர்க்கவருகவிரற்காழி
செறிக்கவருகதிலதநுத லிட்டவருகமறுகில்விளை
யாடவருகமடியிலெடுத் தணைக்கவருகபுதுப்பனிநீ
ராட்டவருகநெறித்தமுலை யமுதமபருகவருகமுத்தஞ்
சூடவருகவுடற்புழுதி துடைக்கவருகவொருமாற்றஞ்
சொல்லவருகதள்ளிடை தோன்றவருகசோதிமணி
மாடநெருங்குந்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிகணவாவருகவே. ௩

இறுகுமரைஞாணினிப்பூட்டே னிலங்குமகரகுண்டலத்தை
யெடுத்துக்குழையின்மிசையணியே னினியுன்முகத்துக்கேற்கவொரு
சிறுகுந்திலதந்தனைச்சாத்திட்டேன் றிருக்கண்மலர்க்குமையெழுதேன்
செம்பொற்கமலச்சீறடிக்குச் சிலம்புதிருத்தேனெறித்துவிம்மி
முறுகுமுலைப்பாலினியூட்டேன் முகம்பார்த்திருக்குமொழிபகரேன்
முருகாவருகசிவசமைய முதல்வாவருகதிரைகொழித்து
மறுகுமலைவாய்க்கரைசேர்ந்த மழலைச்சிறுவாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிமணவாவருகவே. ௪

எள்ளத்தனைவந்துறுபசிக்கு மிரங்கிப்பார்த்துச்சிறுபண்டி
யெக்கிக்குழைந்துமணித்துவர்வா யிதழைக்குவித்துவிரித்தழுது
துள்ளித்துடித்துப்புடைபெயர்ந்து தொட்டிலுதைந்துபெருவிரலைச்
சுவைத்துக்கடைவாய்நீரொழுகத் தோளின்மகரக்குழைதவழ
மெள்ளத்தவழ்ந்துகுறுமூரல் விளைத்துமடியின்மிசையிருந்து
விம்மிப்பொருமிமுகம்பார்த்து வேண்டுமுமையாள்களபமுலை
வள்ளத்தமுதுண்டமகிழ்ந்த மழலைச்சிறுவாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிமணவாவருகவே. ௫

வெண்மைச்சிறப்புள்ளோதிமங்கள் விரைக்கேதகையின்மடலெடுத்து
விரும்புங்குழவியெனமடியின் மீதேயிருத்திக்கோதாட்டித்
திண்மைச்சூரிசங்கினிற்குயவளைத் தேறன்முகந்துபாலூட்டிச்
செழுந்தாமரைநெட்டிதழ்விரித்துச் சேர்த்துத்துயிலுறுத்தாலாட்டப்
பெண்மைக்குருகுக்கொருசேவற் பெரியகுருகுதன்வாயிற்
பெய்யுமிரையைக்கூரலகுபிளந்துபேட்டுக்கினிதளிக்கும்
வண்மைப்புனலைத்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிமணவாவருகவே. ௬

ஓடைக்குளிர்தண்டுளிப்பனியா லுடைந்துதிரையிற்றவழ்ந்தேறி
யொளிரும்புளினத்திடையொதுங்கி யுறங்குங்கமடந்தனைக்கடந்து
கோடைக்குளிர்காற்றடிக்கவுடல கொடுகக்கடுங்கிழங்கழிந்த
குடக்கூன்பணிலந்தாட்புகுந்து குஞ்சுக்கிரங்கியிரைகொடுத்துப்
பேடைக்குருகுக்கொருசேவற் பெரியகுருகின்சிறைப்புறத்துப்
பிள்ளைக்குருகுதனையணைத்துப் பிரசமடறகேதகைப்பொதும்பின்
வாடைக்கொதுங்குந்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே
வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிமணவாவருகவே. ௭

விண்டமாவின்கனிதடத்தின் மீதேவீழக்குருகினங்கள் - வெருவி
யிரியக்கயலவெருண்டு வெடிபோய்மீளமண்டேக- கண்டுபாயவரிவாளை
கழிக்கேபாயக்கழிக்கானற்- சம்புள்வெருண்டு துண்ணெனக்கட் கடை
தான்விழித்துத்தன்பார்ப்பைக் - கொண்டுபோயக்கருவளைக் குலைக்கே
பாயக்குடக்கனியின்- குறுங்காற்பலவுவேர்சாய்ந்தகுழிக்கேகோடிகோ
டிவரி- வண்டுபாயுந்திருச்செந்தூர் வடிவேன்முருகாவருகவே வளருங்க
ளபக்குரும்பைமுலை வள்ளிமணவாவருகவே. ௮

போர்தரிக்குமடியவர்தம்பிறப்பையொழித்துப்பெருவாழ்வும்-பெருங்கொடுங்கொருபவினைப்பெருமையென்னும்பேராளா - சோணிருதர்குலகலகா சேவற்கொடியாய்திருச்செந்தூர்த்- தேவதேவர்சிறைமீட்டசெல்வாவென்றுன்றிருமுகத்தைப்- பாராமகிழ்ந்துமுலைத்தாயர்பரவிப்புகழ்ந்துவிருப்புடனைப் - பாலாவாவென்றழைப்போற்றப் பரிந்துமகிழ்ந்து வரவழைத்தால்- வாராதிருக்கவழக்குண்டோ வடிவேன்முருகாவருகவே- வளருங்களபக்குரும்பைமுலை வள்ளிதனவாவருகவே. ௯

வேறு.

கலைதெரிபகலி வளமுறமருவு கவுணியவருகவருகவே
கருணைபீனுரிமை யடியவர்கொடிய கலிகெடவருகவருகவே
சிலைபொருவருவ வளிமைதயாறுவர் திருவுளமகிழவருகவே
சிறுதுளிவெயர்வுகுதிகொளவுனது திருமுகமலரவருகவே
செங்கலைபரிவிகடமணிமுடிநிருதர் குலமறவருகவருகவே
குருமணியயிரயிருசினைநெடிய குசமுதெபாரவருகவருகவே
மலைமகள்கவுரி திருமுலைபருகு மழவிடைவருகவருகவே
வலையுமிழ்தாள மலையெறிதகரில் வாபதிவருகவருகவே. ௰

அணிகெடுமெவுலி யெறிசிறைபுழுதி யழகுடனெழுகவருகவே
அடியிடுமளவிலைமணிமுரலு மாவொலிபெருகவருகவே
பணிவிடைபுரிய வருமடமகளிர் பாவினர்புகழவருகவே
பலபலமுனிவரனைவருமுனது பதமலர்பரவவருகவே
பிணிமுகமுதுகி லரியணைமழுகு பெறவருமுருகவருகவே
பிறைபொருசடிலர்தமதிடமருவு பிடிபெறுகளிறுவருகவே
மணியிதழொழுகு மமுதுகுதலை மழவிடைவருகவருகவே
வலையுமிழ்தாள மலையெறிதகரில வாபதிவருகவருகவே. ௰௧

வாரானைப்பருவம் - முற்றிற்று.

---

## அம்புலிப்பருவம்.

கலையாணிரம்பாத கலையுண்டுனக்குநிறை கலையுண்டிவன்றனக்குக்- களங்கமருதமா னுனக்குண்டுகுறமான் கருத்துண்டிவன்றனக்குத்- தொலையாதகணமுண்டுனக்குமங்கலகணத்தொகையுண்டிவன்றனக்குத்- துளியமுதமுண்டுனக்கிவனுக்குமாறு சொல்லமுதமுண்டுனக்குக்- கொலைபடாரவழிப்பகையுண்டுகேடிலிடங் கொப்புளிக்குங்கட்செவிக் - கோளரவைக்கொத்திமெரியுமயிலாமிக் குமரனுக்குண்டுகண்டாய் - மலையாழிசூழ்திருச்செந்தில்வடிவேலனுடனம்புலீயாடவாவே-மாவின்முடிநெளியமயின்முதுகில் வருகுமரனுடனம்புலீயாடவாவே ௧

பரமோகமண்டலமகற்றியறிவென்னு முழுமண்டலத்தைத்தொ
டுத்து- வடவைமுகமண்டலத்தழலானுருக்கினன் மண்டலத்தூடுபுக்குச்-
சோமோனையக்கினி மண்டலத்தமுதத் துளித்திவலை பருகியுடலைச்-
சோதிமண்டலமென விளக்குமவரிலனுடைய துய்யமுகமண்டலத்தை-
யேமோகருத்தறவிருத்திப்பெரும்பரத்தெகலைமண்டலமெய்தலா-மெ
ன்றுகொண்டிவண்மண்டலச்சக்கிலையாறெழுதிலிட்டுறவருனைச்- சா
மோபெருக்கமென்செந்திலவடிவேலனுடனம்புலீயாடவாவே- யாவின்
முடிகெளியமயின்முதுகில்வருகுமரனுடனம்புலீயாடவாவே. ௨

முதிருமிசைவரிவண்டலம்புகமல மலைய முகிழ்க்குமிருநாவிதழ்க்கு
ண்- முக்கோணதிலொருவட்டச்சுழிக்குண்பலர்முகமண்டலத்துமெ
யிலா- வெதிருமிருளக்ககாரப்படலைதள்ளிவந் தெழுமிரவிமண்டலத்தி-
லின்புற்றநீனதெரளிக்குமிடமத்தவ ளிரவிமண்டலமுதிக்க- ஞதிரு
மடுசெருவிலைஞ்சேவேலேறுபட்டவ ருகததபெருவெளியாகையா- லெ
ள்ளமுதுகுதத்பதினறுகலைகொள்ளுமுன னுடலினுங்குறைபடாதோ
வதிருமகாழ்சூழ்செந்திலவடிவேலனுடனம்புலீயாடவாவே- யாவின்
முடிகெளியமயின முதுகிலவருகுமரனுடனம்புலீயாடவாவே. ௩

வெறியாரிலைத்தொடைத் தக்கனழல்வேள்வியை வெகுண்டுபகல்
பல்லுகுத்து- வெள்ளிவிழியைக்கொடுத் தயிராவதப்பாகன் வேறருக்
கொடுபறக்கச்- செறியாடகத்தகட்டிதழ்முள்ரிகான்முகன் சென்னியை
த்திருகிவாணி- செய்துண்டந்துண்ட மாக்கியத்தக்கன் சிரத்தையொ
ருவழிபடுத்திப்-பொறியாரழற்கடவுள்கைத்தலமறுத்தவிட்டுபுலவர்முப்
பத்துமூவர்- போனவழியொருவர்போகாபலனையுடலையும புழுதியிற்
றேய்த்ததொல- மறியாததகவைநீ செந்திலவடிவேலனுடனம்புலீயா
டவாவே, யாவின்முடிகெளியமயின முதுகில்வருகுமரனுட னம்புலீயா
டவாவே. ௪

விடமொழுகுதுளை நள்ளெயிற்றுவன்கட்செவிவிரிக்குப்பணுடனி
யர, மென்பொறியுடற்பெரும்பகுவாயரவுடனைவெம்பசியெடுத்து
வெம்பிக், குடதிசைக்கோடையைப் பருகிக்குணதகெழுந் கொண்டலை
யருந்திவாடைச், கொழுந்தையுகதென்றலையு மள்ளிக்குடித்துக்கொழு
க்கதிரையுண்டதினியுன, னிடமொழியவேறு நிலக்கிலைலீயதற் கெ
திர்திற்கவல்லையகலை, யினனுடன்கூடிவிளையாடிநீயிங்கே- யிருக்கலாமின்
குவந்தா, லடல்புனையுமயிலுண்டனைச்சுகவிபாகையா லம்புலீயாடவாவே,
யாவின்முடி கெளியமயின் முதுகில்வருகுமரனுடனம்புலீயாடவாவே,

பண்டுபோலின்னமுக மின்னக்கடைந்திடப் பழையமந்தரமில்லை
யோ- படர்கடற்குண்டகழியளறுகலற்றியிப்பாரினிற்றிடானதோ -வி
ண்டலத்தமரர்களுமமரேசனுஞ்சேர விடிகூடித்தகாதோ- வேவிவெழுமி
ண்டகூடம்வெளியானதோவிடமொழுகுகெட்டெயிற்று-மண்டுவாளை

அண்டமாகவேயெனினுமொரு வசிக்குவாவிலையோ- மதியிலாமதியமேயிவனினைந்தாலெந்தவகைசெலாகாகையால் - யண்டர்நாயகனெங்கள் செந்திலவடிவேலனுடனம்புலீயாடவாவே-யருவரைகள்இடிகிடென மயில்கடவுமுருகனுட னம்புலீயாடவாவே, (௬)

வட்டமாகத்தன்வெளி லடிவுகொளலாலென்று மானைச்சாரித்திருகையான், மச்சகினித்தரங்க குவளமெய்க்கலான்மன்னுங்கணஞ்சூழ்தலா, விட்டமொடுபேரிரவில் வீறுபெறலாலுமிகு மெலமருந்துதிகழ்தலா, விரவிகண்ணுறுகலவி டையதிலேலுமலர் மேலமாலவனாயெய்தலான், முட்டமறைவேள்விக்குரித்தாகையால்வெய்ய முரியாவுக்குடைதலான், முக்கணுமைபங்கனொக்குநீயென்றுதிருமுகமலர்ந்தனையழைத்தா, லட்டபோகம்பெறுவை செந்திலவடிவேலனுட னம்புலீயாடவாவே, யருவரைகள்இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீயாடவாவே. (௭)

காதலாலெறிதிரைக்கடன்மகளிர்சிறுமனார்தளையிற்குவித்தமுத்தன், கழிவாய்வலம்புரியுமிழ்க்கடணிமுத்துமுட் கண்டன்முடல் விண்டகண்ணத், தாதலாவிளவாளை கொடுவருங்கானல்வெண் சங்குநெடுந்திற றுளைந்து, தனியேயுருத்தபாருமுகமுறுத்னிலை சதகோடிநிலவெறிக்கு, மீதலாவொருசிறிதுமிரவில்லையெவருக்கு மிரவில்லை நீயுமிங்கே, யேகினுமுனதுடற்கறைதுடைத்திடலாமெனபதற் கையமில்லை, யாதலானீதிபுனை செந்திலவடிவேலனுட னம்புலீயாடவாவே, யருவரைகள் இடிகிடென மயில்கடவு முருகனுட னம்புலீயாடவாவே. (௮)

கடியவளிவெறியுங் கழைச்சிறைக்கருடிரக் கருடவாகனனு மிகல்கூர், கட்டைமுள்ளாகாள கெட்டிமூடுக்குபொற் கமலயோனியுமெமுழுந்து, கொடியவெங்கொலைபுரி வாகமெனவொருவனெழு குவலையமிடந்துதேடக், குறித்தொருவனெனியோரா யண்டபகிரண்டமுங்கொழுதிககுடைந்துதேட, முடியவிதுகாறுமாறிவுறுவகைகின்ற புழுமுதற் கடவுளடியு, முடியுநீகண்டனையெவைக்காதியென்றுதிரு முகமலர்ந்தனையழைத்தா, லடியவரை வாழ்வித்த செந்திலவடிவேலனுட னம்புலீயாடவாவே, யருவரைகள்இடிகிடென மயில்கடவுமுருகனுட னம்புலீயாடவாவே. (௯)

பெரியமாகத்தனீ வருவையிவன்வஞ்சகம் பேசுமாகத்துள்வாரான், பெருகநீவேலையிற்புகுவாயிவன்பார் பிளககவேலவிட்டா, னரியமாகுணவனாயி நூறுவையீயிவனன்புறுசகுணவனாயெயுறுவா, னுடல்விலேருமுமறுவுனக்குண்டிவனறனக் கொருமறுவுமிலலையினக, கரியமாமுகிலினிலை மறைவையீயிவனென்கரியமாமுகிலனமறையான், கருதியிவையெலாமுணரிவனபெருமையைக் கண்டுநீ யஞ்சாதே, யரியமாதவனெங்கள் செந்தில்வடிவேலனுட னம்புலீயாடவாவே, யருவரைகள்இடிகிடென மயில்கடவுமுருகனுட னம்புலீயாடவாவே. (௰)

பரியநிழறன்னைக் களிந்துசெயிலெடுபொருது பாதசங்கிலியை
யறிப், பாரிசாதத் தருவையிடுருளசெறக்கவுட்பகுவாய்புகக்குதட்டிக
தரிபலர்கோப்புறதெதியிலிடுபாடங்களைத்தாள்படுதறியவர்பொற், ற
ருணமணிமுடியிடறி முறைமுறையழைக்கு நகழச்செவிப்பிறைமரு
ப்புச், சொரியுமதநாரைக் குறுங்கட்பெருங்கோலத் துடியடிப்புநொ
றுத்த, துங்கவேளிறனுடைய முனைறிற்புறநகிற் றுளைக்கா நிமிர்ந்ததுகி
ருகு, மரியகருங்கடமென வெருவல்கேட்கவியானுடனையபுலீயாடவாவே, ய
ருவரைகள்கிடுகிடென மயிலைசடவுமுருகனுடனையபுலீயாடவாவே. (கக)

அம்புலிப்பருவம் - முற்றிற்று.

## சிறுபறைப்பருவம்.

பொருகோரமைக்குருமாவசுரகொடியகுருகுலப் பூபாலரேறுமந்தப் பூ
பாலனுக்கிளைய துணைவர் நூற்றுவருமபொரும பதினெட்டக்குரோணி
யென், றொருவாய்மைசொற்றபடை வீரருஞ்செருவினி லுருகெழு
லுரீதியைவ, ருடனுநின்றபற்குனன்மணித்தேரினுக்குள்ளசாரதியா
கியும், மருவார்கடாணையிற்பட்டபர்த்தனாமருட வர்த்தனா டங்களும்
போய், மயங்கவொருநாள்விசைய னுக்குவிசையமபெருக மண்ணேழு
மூண்டிமிழ்க்க, திருவாய்வலம்புரி முழக்கதிருமான்மருக சிறுபறைமு
ழக்கியருளே, செருவிலெதிர்பொருதசுரநிருதர்குலகலகனே சிறுபறை
முழக்கியருளே. (க)

முருந்தரு மணிப்புதுவவெனத்திலமகளிரிளமுகிழ்முலைத்தனக்கடை
ந்து, முளரிமுலைகீரிற்குளிதருவிடமெருதகாளின முற்றிய தவம்புரிய
வெங், கருந்தாரைகெட்டிலைப் புகர்வேலெனபொருங் கட்கடைக்கருள்
ளுருடைந்து காவிமலர் பங்கப்படக்கருங்குழல்கண்டுகரியமுகிலுடல்வெ
ளுத்துப், பொருந்தாமரைலோடியக்காசாரியபொரு பொருப்பேற வள
மையேறும், புகழுறவாழுந் திருச்செந்திலாயுனது பொற்றுள்வணக்
கமுற்றுக, திருந்தார்நெஞ்சபெரும்பறைமுழக்கநீ சிறுபறை முழ
க்கியருளே, செருவிலெதிர்பொருதசுர நிருதகுலகலகனே சிறுபறை
முழக்கியருளே. (உ)

கங்கைபணியுஞ்சடையில் வைத்தகுழவிப்பிறைக்கடவுளாலயம
ணைத்துங், கஞ்சுற்கருங்கடலகழிநதனைகறையிற் கலித்தவால்வளைமுழ
க்கும், பங்கயமலரப்பொருட்டிதழ்வாய்துளிக்கும் பசுந்தேற லுண்டு
மெள்ளப், பல்கோடிசஞ்சரீகப்படலைபெடையொடியடிந்துபலகான்மு
முக்கும், வெங்கயமுடகரும் புழைக்காமிமிர்த்துவெளி மேகநீரைக்குடி
த்து, வீதிவாய்நின்றுபிளிறிநதினமுழக்கும்வெறி வெண்டிரைக்குண்ட
கழியிற், செங்கயன்முழக்குந் திருச்செந்தில்வேலனே சிறுபறைமுழக்
கியருளே, செருவிலெதிர்பொருதசுரநிருதர்குலகலகனே சிறுபறைமு
முக்கியருளே. (ங)

காவானபாரிசாதத்தருக்குலமிழற்கடவு டெருவிதிரேதாறுங், கடிம
ணப்புதுமங்கலத்தொனி முழக்சமுழைகை கட்டவிழ்த்திசமுழைடைக்கும், பூ
வரிலைதொடைய ளைகாபுரேசன புரக்கொறங்குளிறுமுரசம் பொ
ம்மெனமுழக்க மன்மதனுடையபல்லியப்பொங்குதெண்டிரைமுழக்கப்
பாவாணர்மங்கலக்கவிவாழிபாடிப் பரிந்துநின்றிடமுழக்கப, பாவரிய
திருவிழாவென்றுபலபல்லியம் பட்டினஞ்சேரமுழக்க, தேவாதிதே
வருயர் சதுமறைமுழக்கநீ சிறுபறைமுழக்கியருளே, செருவிலெதிர்
பொருதபா நிருதர்குலகலகனே சிறுபறைமுழக்கியருளே. (ச)

வளைவாய்முழர்குங்கடயானைகொம்பூன் பருப்பில்விளைமுத்துமி
ளவேய், மணிமுததுமபொலேவளைகூர்த்திறகருவரசத்தின் முத்துமண்
ட, ருளைவாய்முழக்கும்பெருமபுறவிலுந்திரத்துமிழுமணிமுத்துமள்
ள, ளொலிபெறுமருதவேலிச்செந்நெல்கன்னறரு மொளிமுத்து மோங்கு
நெய்தற், களைவாய்முழக்குமுட்கூனல்வெண்டளிலங் கடுஞ்சூலுளைந்
துகான்ற, சதிர்முத்துமொய்க்கக் கொழித்து வருபொருநைபாய் கழி
தொறுங்கயல்குதிக்கச், சினைவாய்முழக்குந் திருச்செந்தில் வேலனே
சிறுபறைமுழக்கியருளே, செருவிலெதிர்பொருதபா நிருதர்குல் கலக
னே சிறுபறைமுழக்கியருளே. (ரு)

முனைவாளைவடிவேலைவடுவைவெங்கடுவையிகழ்முளரியைப்பிணை
யைமகவேள், மோகவாளியையடுசகோரத்தைவென்றுகுழைமுட்டிமீ
ளுங்கண்மடவார், நினைவாளைவாண்முறுவலாடியிளமுலைதாளை நேர்நேர்
நிறுத்திநெய்த, னீடுமளகாடவிலனைத்திற் பிணிதுவெணணைத்திலவ
டந்தெரிந்து, புனைவாளைநாண்முடிவிளம்பி நடுவாளைமென் போகிலுறை
வாளையொப்புப் - பொலிவாளைநின்றுகளை களைவாளைநாடிவிளை போங்க
ழிகடந்துமெள்ளச் - சினைவாளைபாயுந்திருச்செந்தில்வேலனேசிறுபறை
முழக்கியருளே - செருவிலெதிர்பொருதபா நிருதர்குலகலகனே சிறுப
றைமுழக்கியருளே. (சா)

அறந்தருபுரக்காதியருலகிலாமகளிராடு மணியூசல்சிற்றி - லம்ம
னைகழங்குபலசெறியுந்தடஞ்சார லருவிபாய்பரங்கிரியுமுட் - புரந்தருபு
னிற்றுவெள்வளைகடற்றிரைதொறும் பொருதசீரலைவாயுமென் - போது
கமழ்திருவாவினன்குடியு மரியமறை புகலுமேரகமுமினிமைக்-குறந்த
ருகொடிச்சியர் பெருங்குரவைமுறைகுலவு குன்றுதோ றாடலுந்தண்-
கொண்முமுழங்குவது கண்டினமெனக்காட குஞ்சரம்பிளிறுமாவஞ்-சி
றந்தபழமுதிர்சோலை மலையும்புரந்தநீ சிறுபறைமுழக்கியருளே- செரு
விலெதிர்பொருதபா நிருதர்குலகலகனே சிறுபறைமுழக்கியருளே. ()

எழுமிரவிமட்கவொளி தருமணிமுத்துநடி யிமையவர் மகிழ்ச்
சிபெறவே-யிருகுழைபிடித்தவிழி யரமகளிர்சுற்றிட மிகுவெணடித்
துவரவே-வழுவறுதமிழ்ப்பனுவல் முறைமுறையுரைத்துவெகுவாகவி

ஞாநட்குழைபவே - மகபதியுமிக்கமுனிவர்கணமுமிச்சையுடன்வழிய
டிமைசெய்பயிடவேபொழுதுதொறுமொக்கவிதிமுறையுனையருச்சனை
செய்புனிதசிவவிப்ரருடனே-புகலரியபத்தசனமாகாவெனக்குலவுபுர
வலர்விருப்பமுறவே செழுமறைமுழக்கவரு முருககுமரக்கடவுளசிறு
பறைமுழக்கியருளே- திரளுமணிமுத்தலையலையெறியுங்கருக்கதிபசிறு
பறைமுழக்கியருளே. (அ)

தயனனிரதபபுரவி யலமுறைதயில்வட்டமிடுசருணவடவெற்பசை
யவே-தமரதிமிரதமி ரெரியுமகாப்பெரியசலநிதியொலியற்றவியவே,
புயனமுழுதொகககமணி முடியிசையிறுகதுபல பொறியுரகனச்சமுற
வே-புணரியிடைவற்றமொகு மொகுமொகுவெனப்பருகு புயலுருமு
வெட்கியிடவே-பவனனுமிருத்தகடையுகமுடிவெனப்பெருமை பரவி
யடியிற்பணியவே-படகமிடிதழனியகாவெருவிக்கரிய பரியவரை
யிற்புகுதவே சிவனருணகிக்கவரு முருககுமாக்கடவுள்சிறுபறைமுழ
க்கியருளே-திரளுமணிமுத்தலையலையெறியுங்கருக்கதிப சிறுபறைமுழ
க்கியருளே. (௯)

சகாமகாச்சலதிபுகருதனிவிபபொழுது சருவிய புறச்சமையநூ-
றலையழியமுகதிதரு சிவசமயமுதாபெற தவநெறிதழைத்துலாவே-
யகரவுகரதிலன்னோ பொருளடைவுபத்தியுற யடியவர் தமக்கருளவே-
யபாமுலகதயரு மெலநமனுவிபபாவி யடியினை யிணைப்பணியவே-பக
ரவுநிணைதிடவு மரிதனது சொறபெருமை பாதியளிக்குமெனவே-ப
லபலமுனிதலைவரனவருமனமகிழியபணிவிடைதனைபபுரியவே- சிக
ரபாலெறபிலவரு முருககுமாரக்கடவுள சிறுபறைமுழக்கியருளே- திர
ளுமணிமுத்தலையலையெறியுங்கருக்கதிப சிறுபறைமுழக்கியருளே. (௰)

சிறுபறைப்பருவம் - முற்றிற்று.

---

## சிற்றிற்பருவம்.

பொன்னின்மணக்கும்புதுப்பனவிற்புடைசூழ்பணிலமுத்தெடுத்
துப்-புறக்கோட்டகமுண்டாக்கி வலம்புரியைசதுராகக் கலமமைத்துக்-
கன்னிமணக்குங்கமுனியிற்செங்கமலப்பொகுட்டுமுகையுடைதுக்-கக்
குஞ்செழுதேனுலையறிகழைநித்திலவரிசியைப்புகட்டிப்-பன்னி
மணக்குபபுதுப்பொழிலிறபலபூபபறிததுக்கறிதிருத்தி-பரிந்துசிறு
சோறடுமருமை பாராயிராபதபபாகனை - பொன்னிமணக்குஞ் சேவடி
யாற் சிறியேஞ்சிற்றிலசிதையேலே - திரைமுத்தெறியுந் திருச்செந்
தூர்ச் செல்வா சிற்றிலசிதையேலே. (௧)

தையன்மடவாரிழைத்த வண்டறன்னையழிக்குமதுக்கல்லத்- தாள
முறுதகிய்னதுபொற்பூங் கண்டைத்திருக்காட்டியாதோ-துய்யதவளப்
பிறைமுடிக்குஞ் சோதியெடுத்து முகந்தணைத்துந் - தோளிலிருந்தும்
பொழுதுமணித தோளிற்புழுதிதோயாதோ - வையமனைத்துமின்றெ
டுத்தும வயதுமுதிரா மடப்பாவை - மடியிலிருத்தி முலையூட்டி வத

ணத்தணைக்கிலுன்கழற்காய், செய்பசிறுதூள்செறியாதோ சிறியேஞ்சிற்
றில்சிதையேலே. திரைமுத்தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வாசிற்றில்சி
தையேலே. (௨)

கௌவுங்கரடமடையுடைக்குந் தந்திப்பகடுபிடிபட்டுத் - தருவுமழுதுமிருநிதியுந் தனியேகொள்ளைபோகாம - லெவ்வமுறவிட்புலத்தமரரேக்கமுறுமலயிராணி - யிடுமங்கலநாணழியாமலிமையோரிறைஞ்சுமாமகளிர், பௌவமெறியுந்துயராழிப பழுவத்தழுந்திமுழுகாமற் - பரக்குஞ்சுருதித்துறைவேள்வி பழுதாகாமற்பரவரிய - தெவ்வர்புரத்தையடுஞ்சிறுவா சிறியேஞ்சிற்றில்சிதையேலே - திரைமுத்தெறியுந்திருச்செந்தூர்ச் செல்வாசிற்றில்சிதையேலே (௩)

ஆடுங்கொடித்தேரொழுபுரவி யருணடத்துமகவிடத்தை
யடைவேபடைத்தும்படைத்தபடி யளித்துந்துடைத்துமுத்தொழிலுங்
கூடும்பெருமையுனக்குளது கூடார்புரத்தைக்குழாம்பறிக்கக்
கொள்ளுங்கருத்துநினைகருத்துக் கொங்கைசுமந்துகொடிமருங்குல்
வாடுங்கலகவிழிமடவார் மலர்க்கைசிவப்பமணற்கொழித்து
வண்டலிழைத்தமணியழிற்கை வனபோசனுமகவானுந்
தேடுங்கமலத்திருத்தாளாற் சிறியேஞ்சிற்றில்சிதையேலே
திரைமுத்தெறியுந்திருச்செந்தூர்ச் செல்வாசிற்றில்சிதையேலே. (௪)

புற்றிலரவந்தனைப்புனைந்த புனிதருடனேவீற்றிருக்கப்
பொலியுங்கிரிவாளகிரிப் பொருப்பையவளர்த்துச்சுவராக்கிச்
சுற்றில்வளர்ந்தவரையனைத்துஞ் சுவர்க்காலாக்கிச்சுடரிரவி
தோன்றுமறையுஞ்சுருப்பைவெளி தொறுந்தோரணக்காலெனநாட்டி
மற்றிலுவமையெனுங்கனக வரையைத்துளைத்துழையாக்கி
மாகமுகிலைவிதானமென வகுத்துமடவாருடன்கூடிச்
சிற்றிலிழைத்தபெருமாட்டி சிறுவாசிற்றில்சிதையேலே
திரைமுத்தெறியுந்திருச்செந்தூர்ச் செல்வாசிற்றில்சிதையேலே. (௫)

மிஞ்சுங்கனகமணித்தொட்டின் மீதேயிருத்தித்தாலுரைத்து
வேண்டும்படிசப்பாணிகொட்டி விருப்பாய்முத்தந்தனைக்கேட்டு
நெஞ்சுமகிழவரவழைத்துநிலவைவருவாயெனப்புகன்று
நித்தலுனதுபணிவிடையி னிலைமைகுலையேயறிவாய்
பிஞ்சுமதியினொருமருப்புப் பிறங்குமிருதாட்கவுட்சுவடு
பிழியுங்கரடமும்மதத்துப் பெருத்தநால்வாய்த்திருத்தமிகு
மஞ்சுகரக்குஞ்சரத்துணையே யடியேஞ்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ரரசேசிற்றிலழியேலே. (௬)

துன்றுதிரைக்குண்டகழ்மடுவிற் சூரனொளிக்கப்பகைநிருதர்
தொல்லைப்பதியுமவரிருந்து துய்த்தவளமுந்தூளாக்கி
வென்றுசெருவிற்பொருதமிழ்த்தாய் வேதாவிதித்தவிதிப்படியை
விலக்கிவெகுண்டுமீண்டளித்தாய் வேண்டுமடியார்வினையொழித்தாய்
கன்றுமமணங்கழுவேறக் காழிப்பதியில்வந்துதித்துக்

கள்ளப்பரசமயக்குரும்பர் கலகமொழித்துக்கட்டழித்தா
யன்றுகொடுத்துன்வழியடிமை யடியேஞ்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ராசேசிற்றிலழியேலே. (௭)

களிப்பாருனைக்கண்டவரவரே கண்ணுமனமும்வேறாகிக்
கள்ளனிவனைநம்முடைய காதல்வலையாற்கட்டுமென
விளிப்பார்விரகமங்குரித்த வேடப்புலிப்பைப்பாரென்று
மெள்ளநகைப்பாரிவருடனே விளையாடாமல்வேறாகித்
துளிப்பார்திரைக்குண்டகழுடுத்த தொல்லைப்பதியும்பகிரண்டத்
தொகையுந்தொகையில்பல்லுயிருங் கோற்றமொடுக்கந்துணையாய்நின்
றளிப்பாயழிக்கைகடனலக்கா ணடியேஞ்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ராசேசிற்றிலழியேலே. (௮)

கூவிப்பரிந்துமுலைத்தாயர் கூட்டியெடுத்துமுலையூட்டிக்
குடுமிதிருத்திமலர்சொருகிக் கோலம்புனைந்துகொண்டாடிப்
பூவிற்பொலிந்ததிருமேனிப் புனிதாவண்டம்புறத்தெயிலிற்
புகுந்தாலினியுனுடலேறப் புழுதியிறைத்துப்போகாமற்
காவிக்குறுங்கோட்டிதழ்நெருக்குங் கண்ணிதனைக்கொண்டோச்சிவனைக்
கானற்றாளத்தொடையாலுன் கைத்தாமரையைக்கட்டிவிடோ
மாவித்துணையேவழியடிமை யடியேஞ்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ராசேசிற்றிலழியேலே.

பொய்பாவளமைதரும் பெருமைப்பொருநைத்துறையினீராட்டிப்
பூட்டுங்கலன்கள்வகைவகையே பூட்டியெடுத்துமுலையூட்டி
மெய்யாலணைத்துமறுகுகளில் விட்டாரவரைவெறுமலுன்னை
வெறுக்கவேறுகடனுமுண்டோ விரும்பிப்பாலைக்கொழித்தெடுத்துக்
கையாலிழைத்தசிற்றிலைநின் காலாலழிக்கைக்கடனலக்காண்
காப்பானழிக்கத்தொடங்கிலெங்கள் கவலையெவரோடினியுரைப்போ
மையாவுனதுவழியடிமை யடியேஞ்சிற்றிலழியேலே
யலைமுத்தெறியுந்திருச்செந்தூ ராசேசிற்றிலழியேலே (௰)

சிற்றிற்பருவம் - முற்றிற்று.

## சிறுதேர்ப்பருவம்.

தண்டெனுடைந்தொழுகுமருமாலைநீண்முடிகரிக்குஞ்சதக்கிருதுசெந்
தருணமணியாசனத்தேறமாதலிசெழுந்தமணியத்தேருருட்டப்
பண்டேபழம்பரை நிசாசரர்களுட்கப் பரப்புநிலைகெட்டதென்று
பரவுங்குபேரன்வட பூகாம்பொருபுட்பகத்தேருருட்டவீறு
கொண்டேயுதித்தசெங்கிராயிரக்கடவுள்குண்டலந்திருவில்வீசக்
கோலப்ராபாமண்டலச்சுடர்துடக்கமுட் கோலெடுத்தருணவருணன்
திண்டேருருட்டவளர் செந்தில்வாழ்கந்தனே சிறுதேருருட்டியருளே
சேவற்பதாகைக்குமாரவெம்பிரனே சிறுதேருருட்டியருளே. (௧)

வாராருமிளமுலைமுடைத்துகிற்பொதுவியர் மனைக்குட்புகுந்துமெள்ளவைத்தவெண்டயிருண்டுகுடமுருட்டிப்பெருகவரிவெண்ணெயையுருட்டிப், பாரமலுண்டுசெங்கனிவாய்துடைத்துப் பருஞ்சகடுதனையன்று பரிபுரத்தாளாலுருட்டிவிளையாடுமொரு பச்சைமான்மருகபதி, யாராமைகூருமடியவர்பழவினைக்குழாம பறவேயுருட்டிமேலை, யண்டமிரண்டமுமனைத்துலகமுஞ்செலலு மாணையாழியையுருட்டிச், சேராநிசாசரர்சிரக்குலமுருட்டுநீ சிறுதேருருட்டியருளே, சேவற்பதாகைக்குமாரவெம்பிரானே சிறுதேருருட்டியருளே. (உ)

கொங்கவிழ்கடஞ்சாரன மலையமால்வரைநெடுங் குடுமியில்வளர்ந்த தெய்வக், கொழுங்கொனறலங்கன்று மாடகப்பசுநிறங் கொண்டுவிளையும் பருவரைச், சந்தனநெடுந்தருமலர்ப்பொதும்பருமியற் றணைபொருநைமாநதியுமத், தணைபொருநைபாயவிளை சாலிநெற்குலையுமச்சாலிநெற்குலை படர்ந்து, மூங்கிலையுமடரு முளிக்கரும்புமபரு முளிக்கரும்படைக்கற்றுது. முலைநெறிக்கும்புனிற் றெருமையுஞ்சிறுவா மொழியும்பரந்துவழியுஞ், செந்தமிழ்மணக்குந் திருச்செந்திலம்பலவனே சிறுதேருருட்டியருளே, சேவற்பதாகைக்குமாரவெம்பிரானே சிறுதேருருட்டியருளே. ( )

பெருமையுடனீடலத்திருவர் பரசமையமும்பேதம்பிதற்றிவிட்ட, பிறைமருப்புக்கரும்பகடுபுந்நீரிற் பிழைத்துநீள்கலாயிலேறப், பொருவருஞ்சன்னிதியிலெய்துவதுபோன்மணிபுடைக்குமிளநீரிரணடு புணரியினமிகந்து சன்னிதியேறவீர்ந்தட்பொருந்தவிளையாடிமுன்னு, ளிருதிரையினிற்சந்தனக்கொடிமரத்தினை யிழுத்துவருமெருமையேற்றை, யெப்பொழுதுமுதியகம்பகடாகவுலகத்தி லியாவருங்காணவென்று, திருவுளமகிழ்ந்துதிருவிளையாடல்சமைடநீ சிறுதேருருட்டியருளே, சேவற்பதாகைக்குமாரவெம்பிரானே சிறுதேருருட்டியருளே. (ச)

ஆதிநான்மறைபாகியதனுறும்பொருளாகியல்லவையனைத்துமாகி
யளவினுக்களவாகியணுவினுக்கணுவாகியனைத்துயிருமாகியதனின்
சாதியின்பிறிவாகிவெவ்வேறுசமயங்களானுகிநானுகிமெய்ச்
சாலோகசாமீபசாரூபசாயுச்யதன்னொளியிலீலையாகி
யோதியதனைத்தினு மடங்காமல்வேறாகியுள்ளுமபுறம்புமாகி
யொளியிலொளியாகிமற்றிரவுபகலற்றவிடமொப்புவித்தெனையிருத்தித்
தீதினையகற்றிநின்றிருவருள்புரிந்தவா சிறுதேருருட்டியருளே
சேவற்பதாகைக்குமாரவெம்பிரானே சிறுதேருருட்டியருளே. (ரு)

வேறு.

புலமைமலிந்தகமயூரவாகனவள்ளிபோகபூஷணசூரன், சலமொழித்தவனிசாசரர்குலாந்தகசடாட்சரகாங்கேய, குலவுகொற்றவகுமாரகண்டீரவகுருபரபுருகூத, னுலகளித்தவர்செந்தில்வாழ்கந்தனேயுருட்டுகசிறுதேரோ, யுரகநாயகன்படமுறலைபொடிபடவுருட்டுகசிறுதேரோ. (சா)

வீதிமங்கலவிழாவணிவிரும்பியவிண்ணவராமாதர்
சோதிமங்கலகலசகுங்குமமுலைதோய்ந்தாங்களிகூறச்
சாதிமங்கலவலம்புரியினமெனத்தழைச்சிறையொடுபுல்லி
யோதிமந்துயில்செந்தில்வாழ்கந்தனேயுருட்டுகசிறுதேரே
யுரகநாயகன்பஃறலைபொடிபடவுருட்டுகசிறுதேரே. (எ)

விரைத்தடம்பொழில்வளைமணியாசனத்திருந்துவிண்ணவர்போற்ற
வரைத்தடம்புனைபழவிடையெம்பிரான்மனமகிழ்ந்திடவாக்கா
விரைத்தபல்கலைப்பரப்பெலாந்திரட்டிமற்றதுபொருளெனமேனா
ளுரைத்ததேசிகசெந்தில்வாழ்கந்தனேயுருட்டுகசிறுதேரே
யுரகநாயகன்பஃறலைபொடிபடவுருட்டுகசிறுதேரே. (அ)

மாதுநாயகமெனவடிவுடையசீர்வள்ளிநாயகமண்ணி
வீதுநாயகமெனவுனையன்றிவேறெண்ணநாயகமுண்டோ
போதுநாயகன்புணரியிறையகன்பொருப்புநாயகன்போற்றி
யோதுநாயகசெந்தில்வாழ்கந்தனேயுருட்டுகசிறுதேரே
யுரகநாயகன்பஃறலைபொடிபடவுருட்டுகசிறுதேரே. (கூ)

தக்கபூசனைச்சிவமறையோர்பெருந்தானநாயகர்தம்போர்
திக்கனைத்திலுமெலாமுதலிமையவர்தேவர்தந்திருமேனி
மிக்கமாவிகைதருபவராடியவர்மின்னனார்சமையத்தோ
ரொக்கவாழ்கெனச் செந்தில்வாழ்கந்தனேயுருட்டுகசிறுதேரே
யுரகநாயகன்பஃறலைபொடிபடவுருட்டுகசிறுதேரே. (ய)

சிறுதேர்ப்பருவம்-முற்றும்.

திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

ஆக பருவம் பத்துக்கு கவி-௱கூ.

## பலஸ்துதி.

மருநாண்மலர்ப்பொழிலுடுத்தகூடமெங்குமலைவாய்கொழித்தெறியுமுத்தை, வணடவிடுமெக்கல்புடைசூழ்திருச்செந்தில்வரு மயில்வாகனக்கடவுளெங், குருநாதனொருதெய்வயானைதனபாகன் குறக்கொடிக்குந்தழைச்சிறைக், கோழிக்கொடிக்குங்குமாரவெம்பிரான் குறும்பிறைமுடிக்குபபிரா, னிருநாழிநெற்கொண்டுமுப்பத்திரண்டறமு மெங்குமூட்டாதளக்கு, மிறைவிதிருமுலையமுத முண்டுஞானம்பெருகுமெம்பிரானினியபிள்ளைத், திருநாமமெழுதுவார்கம்பார்படிப்பார் செகம்பொதுவறைப்புரந்து, தேவாதிதேவரும்பரவுசாயுச்சியச்சிவபதத்தெய்துவாரே.